# மன்னார் கரையில் கடத்தல் படகு பிடிபட்டது

## சந்தேகத்தில் ஐவர் கைது

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★


# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 288
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கார்த்திகை 13 றம்ழான் 17 வெள்ளிக்கிழமை [28-11-69]




பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், வெள்ளி கள்ளக்கடத்தல் சாரங்களுடன் இந்தியாவிலிருந்து வந்ததாகக் கூறப்படும் இயந்திர வள்ளமொன்று நேற்றுக்காலை மன்னார்க் கடற்கரையில் வைத்துக் கைப்பற்றப்பட்டது.

பேசாலை என்ற இடத்தில் வைத்தே தலைமன்னார் பொலிசார் இவ்வள்ளத்தைக்கைது செய்தார்களாம். வள்ளத்திலிருந்து சுமார் 350 பழய காட் சாரங்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

கைதான ஐந்து பேரும் கொழும்பைச் சேர்ந்தவர்களாகவிருக்கலாமென்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட சாரங்களும் வள்ளமும் மன்னார் சுங்க இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பொலிஸ் - சுங்கவிசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது (கா. நி)

### இருவர் கைது

வல்வெட்டித்துறை, வியா. வல்வை நெடியகாடு பிள்ளையார் கோவில் அறையொன்றில் புகுந்து அங்கு வைக்கப்பட்டிருந்த 60 மின்சார பல்புகளையும். வேறு பல மின்சார உபகரணங்களையும் களவாடி விற்க முற்பட்ட இருவரை வல்வெட்டித்துறை பொலிசார் கைது செய்து றிமாண்டில் வைத்துள்ளனர்.

### பொலிஸ் நிலையங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி இப்போது கிளிநொச்சி உதவி பொலிஸ் சுப்பிரிண்டனின் நிர்வாகத்தில் இயங்கி வரும் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் அடுத்த 1ம் திகதி முதல் யாழ். உதவிபொலிஸ் சுப்பிரிண்டனின் நிர்வாகத்தில் இயங்கும். தற்போது மன்னார் உதவி பொலிஸ்சுப்பிரின்டனின் நிர்வாகத்தில் இயங்கிவரும் வவனியா பொலிஸ் நிலையம் அடுத்த மாதம் முதலாம்திகதி முதல் கிளிநொச்சி உதவிபொலிஸ் சுப்பிரிண்டனின் நிர்வாகத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. (கா. நி.)

### வலைகள் திருட்டு

அல்லைப்பிட்டி, வியாழன் வேலணைத்துறைமுகக் கடற்கரையில் மீன் பிடிப்பதற்காக ஊர்காவற்றுறை தம்பாட்டி மீனவர்களால் போடப்படும் வலைகள் இரவோடிரவாக திருட்டுப்போவதாகத்தெரிய வருகிறது. இது சம்பந்தமாகதம்பாட்டி கடற் தொழிலாளர் ஊர்காவற்றுறைப்பொலிசில் புகார்கள் செய்துள்ளனர்.

## தந்தையும் மகனும் பிணையில் விடுதலை

மட்டுவில், வியாழன் திருட்டுப்போன அலங்கார உற்சவமூர்த்தி விநாயக விக்கிரகத்தைத் தமது கோவிலில் வைத்திருந்த பூசகர்களான தந்தையும் மகனும் 500 ரூபா ஒரு வருட நன்னடத்தைப் பிணையில்செல்லும்படியும், கோட் செலவு ரூபா 150 கட்டும் படியும் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராஜா தீர்ப்பளித்தார்.

மட்டுவில் கல்வத்துப்பிள்ளையார் ஆலயத்தில் அண்மையில் திருட்டுப்போன விநாயக அலங்கார உற்சவமூர்த்தி விக்கிரகம், கல்வயல் புலுட்டையன் பிள்ளையார் ஆலயத்தில் இருப்பதாகச் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து சாவகச்சேரிப் பொலிஸ் அதிபர் திரு. கு. துரைசிங்கம் மேற்படி ஆலயத்துக்குச் சென்று குறிப்பிட்ட விக்கிரகத்தைக் கைப்பற்றியதுடன் மேற்படி ஆலயப் பூசகர்களான கதிரவேலு சின்னத்தம்பி, அவரது மகன் விவேகானந்தராஜா ஆகிய இருவரையும் கைதுசெய்து அவர்கள்மீது வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா விசாரணை செய்தார். விசாரணையின் போது எதிரிகள் குற்றஞ் செய்யக்கூடியவர்கள் அல்லவென்றும் ஏமாற்றப்பட்டு இருக்கவேண்டும் என்றும் தெரியவந்தது.

### கண்டியில் பிரதமர்

கண்டி, வியாழன் நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டுபிரதமர் திரு. டட்லி சேனநாயகா இன்று கண்டி வந்துள்ளார்.

கண்டி விவசாயக் கமிஷனால் அமைக்கப்பட்டுள்ள புதிய வீதியை பிரதமர் திறந்து வைத்தார்.

# 4 அமைச்சர்கள் டிசம்பரில் யாழ்ப்பாணம் வருகிறார்கள்

## உபவானொலி நிலயம் அமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம் வெள்ளி

**தேசிய அரசாங்கத்தின் நான்கு அமைச்சர்கள் அடுத்த மாத பிற்பகுதியில்வடபகுதிக்கு உத்தியோகபூர்வமானவிஜயஞ்செய்ய விருக்கிறார்கள்**

இந்த நான்கு அமைச்சர்களும் திட்டமிட்டுள்ளபடி வடபகுதிககு விஜயம் செய்தால் தேசிய அரசாங்கத்தின் 19 அமைச்சர்களும் அவர்களது பதவிக்காலத்தில் இங்கு வந்து சென்றுள்ளார்கள் என்ற பெருமை ஏற்படும்.

இலங்கை சுதந்திரமடைந்தபின் ஓர் அரசாங்கத்தின் சகல அமைச்சர்களும் வடபகுதிக்கு விஜயம் செய்வது இதுவே முதல்தடவையாகும்

ராஜாங்க அமைச்சர் திரு ஜே ஆர் ஜயவர்த்தன, கைத்தொழில் கடற்றொழில் அமைச்சர் திரு பிலிப்குணவர்த்தன, சுகாதார அமைச்சர் திரு ஈ எல் சேனநாயகா தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு ஜே ஏ அமரதுங்கா ஆகிய நால்வருமே வடக்கிற்கு வருகிறார்கள்

யாழ். மாவட்டத்தில் தேசிய ... கின்றார்

வடக்கில் உபவானொலி நிலையம்அமைப்பது சம்பந்தமான நடவடிக்கைகளைமேற்கொள்ள அமைச்சர் அமரதுங்கா வருகின்றார்

டிசம்பர் 15ந் திகதிநடைபெறும் கொழும்பு மாநகர சபைத் தேர்தலைத் தொடர்ந்தே இவர்கள் இங்கு வருகின்றார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது

தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. ஜே. ஏ. அமரதுங்காவைத் தவிர்ந்த ஏனைய அமைச்சர்கள் ஏற்கனவே வடபகுதிக்கு விஜயம் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (கா நி)

### ஏழு பிள்ளைகளின் தந்தை லொறி மோதி மரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி ஏழு பிள்ளைகளின் தந்தையான 50 வயது நபர்ஒருவர் லொறிமோதியதால் ஏற்பட்ட காயங்களினால் மரணமானார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினமிரவு நடைபெற்றது.

சுமார் ஒரு மாத காலத்துக்கு முன்னால் உடுப்பிட்டியில் நடைபெற்ற லொறி விபத்தில் காயமுற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சோமசுந்தரம் விஸ்வலிங்கம் என்பவர் நேற்று முன்தினம் இரவு ஆஸ்பத்திரியில் மரணமானவராவர்.

இம் மரணம் சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. என் இராசநாயகம் நேற்று மரணவிசாரணை நடத்தினார் யாழ் ஆஸ்பத்திரி சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பாலசிங்கம் மரணமானவரைப் பிரேத பரிசோதனை நடத்தினார்

லொறிச் சாரதி வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டார். (கா. நி)

## தண்ணீர் சண்டையில் பிக்கு ஒருவர் கொலை

நாடு முழுவதும்

## ஆஸ்பத்திரி ஆய்வுகூட ஊழியர் வேலைநிறுத்தம்?

யாழ்ப்பாணம், வெள்ளி இலங்கை முழுவதுமுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் ஆயிரத்துக்குமதிகமான ஆய்வு ... அம்சங்களை மையமாக வைத்தே ஆஸ்பத்திரி ஆய்வுகூட நுட்ப உதவியாளர்கள் [டெக்னோலஜிஸ்ட்ஸ்] இன்று வேலைநிறுத்தத்தில் குதிப்ப ... மலம் ஆகியன பரிசோதனை செய்யும் வேலைகள்முற்றாக தடைப்படக்கூடும்

### யாழ் ஆஸ்பத்திரியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று முன்தினம் இரவு (கா. நி)

தொழில் கடற்றொழில் அமைச்சர் திரு பிலிப்குணவர்த்தன, சுகாதார அமைச்சர் திரு ஈ எல் சேனநாயகா தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு ஜே ஏ அமரதுங்கா ஆகிய நால்வருமே வடக்கிற்கு வருகிறார்கள்

யாழ். மாவட்டத்தில் தேசிய வாலிபர் சேவையை ஆரம்பித்துவைக்க ராஜாங்க அமைச்சர் திரு ஜே ஆர் ஜயவர்த்தன வருகின்றார்

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை வேலைகளைப்பார்க்கடற்றொழில் பிரதேசங்களைப் பார்க்கவும் அமைச்சர் பிலிப் குணவர்த்தன வருகிறார்

அனலைதீவு ஆஸ்பத்திரியைத் திறந்துவைக்கவும், சுகாதார அதிகாரிகளுடன் உயர்தர ஆலோசனை மேற்கொள்ளவும் சுகாதார அமைச்சர் சேனநாயகாவரு நிலையம் அமைப்பது சம்பந்தமான நடவடிக்கைகளைமேற்கொள்ள அமைச்சர் அமரதுங்கா வருகின்றார்

டிசம்பர் 15ந் திகதிநடைபெறும் கொழும்பு மாநகரசபைத் தேர்தலைத் தொடர்ந்தே இவர்கள் இங்கு வருகி தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. ஜே. ஏ. அமரதுங்காவைத் தவிர்ந்த ஏனைய அமைச்சர்கள் ஏற்கனவே வடபகுதிக்கு விஜயம் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (கா நி)

# தண்ணீர் சண்டையில் பிக்கு ஒருவர் கொலை

யாழ்ப்பாணம், வெள்ளி

பொலனறுவையைச் சேர்ந்த கமானந்த தேரோ என்பவர் அவரது வளவுக்குள் கொலையுண்டு கிடந்ததாகப் பொலிஸ் தலைமைக்காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

நெல்வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுவது சம்பந்தமாக மற்றொருவருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்தே இவர் கொலைசெய்யப்பட்டிருக்கலாமென பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது

மரணமான பிக்குவின் அயலவரான சோமபாலா என்பவர் கைதுசெய்யப்பட்டு பொலிஸ்பாதுகாப்பில்வைக்கப்பட்டுள்ளார்

கிளிநொச்சி உதவிபொலிஸ் சுப்பிரின்டன் திரு என் என் டி சில்வா இதுசம்பந்தமான விசாரணை நடத்தினர் மாஜிஸ்திரேட் ஸ்தல விசாரணையும் நடைபெற்றது (கா நி)

# நீந்திப் பழகிய மாணவன் நீரில் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கார் டியூப்புடன் குளத்தில் நீந்திப்பழகிய கல்லூரி மாணவன் ஒருவன் நீரில் மூழ்கியதால் மரணமான பரிதாபகரமான சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் கோப்பாயிலுள்ள இருபாலை என்ற இடத்தில் நடைபெற்றது

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஏச் எஸ் சி வகுப்பு மாணவனான ஏ கோகிலவரதராசன் [20 வயது] என்பவரே இவ்வாறு மரணமானவராவார்

இருபாலையிலுள்ள பெரிய குளத்தில் இவர் கார் டியூப்பும் கொண்டுபோய் நீந்திப் பழகியதாகவும் கைதவறிய டியூப்பை எட்டிப் பிடிக்கையில் நீரில் மூழ்கியதாகவும் கோப்பாய் ஆஸ்பத்திரிககு எடுத்துச்செல்லப்பட்டு மரணமானதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

மரணமானவருடன் குளத்தில் நீந்திச்சென்ற அ சுந்தரலிங்கம், மு மகில்ராஜன் ஆகியோரின் சாட்சியங்களைப் பதிவுசெய்த பின்னர் விபத்து மரணமென்று மரண விசாரணை அதிகாரி திரு எஸ் கனகரத்தினம் தீர்ப்பளித்தார் (கா நி-கோப் நி]

'வேலணையில்

## கிராம வங்கி நிறுவுக'

அல்லைப்பிட்டி, வியாழன்

'உணவு உற்பத்தியைப் பெருக்கும் நோக்கமாக அரசாங்கத்தினால் நிறுவப்படவிருக்கும் கிராம வங்கிகளில் ஒன்றைதீவுப்பகுதிமக்களின் முன்னேற்றத்தைக்கருதி தீவுப்பகுதியின் மத்திய இடமாகிய வேலணையில் நிறுவும்படி' தீவுப்பகுதிஐக்கியஇளைஞர் முனினேற்றக் கழகம் வடமாகாண அராசாங்க அதிபரிடம் கேட்டுள்ளது.

## இன்று

யாழ்ப்பாணம் வெள்ளி

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சுக்கிரவாரமாகிய இன்று மாலை 6மணி முதல் இரவு 7மணி வரை வித்துவான் க. கி. நடராஜன் பெரியபுராண விரிவுரைத் தொடரில் ' திருநாளைப் போவார்'' என்றபொருள்பற்றி கதாப் பிரசங்கம் நிகழ்த்துவா. இரவு 7 மணிக்குசுக்கிரவார அம்மன் உற்சவம்நிகழும்.

யாழ் பொலிஸ் கைப்பற்றியது

# காரில் சென்ற இருவருடன் இருபது போத்தல் சாராயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மோட்டார்கார் ஒன்றில் 20 போத்தல் வடிசாராயத்தை ஏற்றிச் சென்ற கார்ச் சாரதியையும்மற்றொருவரையும் பொலிசார் வடிசாராயத்துடன் வைத்துக் கைதுசெய்தார்களாம்.

யாழ்ப்பாணம் தபால் நிலையத்துச் சந்திக்கருகாமையில் இச்சம்பவம் நேற்றுக் காலை நடைபெற்றது.

சப்இன்ஸ்பெக்டர் திரு. சுசந்தா தலைமையில் சென்ற திடீர் சோதனைப் பொலிஸ் குழுவினரே 20 போத்தல் வடிசாராயத்தையும் காரையும் இருவருடன் கைப்பற்றினர்

கைதான கார் சாரதியும் மற்றவரும் பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டனர்.

(கா. நி)

## கைத்தொழில் பேட்டை

காலி, வியாழன்

காலிப்பகுதிக்கு ஒரு கைத்தொழில்பேட்டை விரைவில் நிறுவப்படவிருக்கிறது.

# ஊழியர் வேலைநிறுத்தம்?

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை முழுவதுமுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் ஆயிரத்துக்குமதிகமான ஆய்வுகூட நுட்ப உதவியாளர்களும் இன்று காலைமுதல் வேலைநிறுத்தத்தில் குதிக்க விருப்பதாக நேற்று மாலை அறிவிக்கப்பட்டது இவர்கள் வேலைநிறுத்தம் செய்தால் ஆஸ்பத்திரிகளின்பல முக்கிய ஆய்வு கூட வேலைகள் ஸ்தம்பிக்குமாம் எனவும் பல்வேறுசிகிச்சைகள் பெற ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்படும்நோயாளிகளுக்கு பெரும் கஷ்டம் ஏற்படுமெனவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் அச்சம் தெரிவித்தன

சம்பள உயர்வு, கடமையாற்றும்நேரம் போன்றபல அம்சங்களை மையமாக வைத்தே ஆஸ்பத்திரி ஆய்வுகூட நுட்ப உதவியாளர்கள் [டெக்னோலஜிஸ்ட்ஸ்] இன்று வேலைநிறுத்தத்தில் குதிப்பதாக மேற்படி ஊழியர் சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்

க்டந்த வருடமும் இவர்கள் வேலைநிறுத்தம் செய்தபோது அரசாங்கம்கொடுத்த வாக்குறுதிகளை இன்னமும் நிறைவேற்றாததும் வேலைநிறுத்தத்துக்கு ஒரு காரணமென்று கூறப்படுகிறது

ஆயிரத்துக்கு மேற்பட்ட ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் குதிப்பார்களானால் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், குருநாகல், காலி போன்ற பல முக்கிய ஆஸ்பத்திரிகளில் இரத்தம், சலம் மலம் ஆகியன பரிசோதனை செய்யும் வேலைகள்முற்றாக தடைப்படக்கூடும்

### யாழ் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் 16 ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் குதிக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

வடபகுதி சுகாதார அத்தியட்சகரின் நிர்வாகத்திலுள்ள ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, மந்திகை, கிளிநொச்சி, ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் ஆய்வுகூட தொழில்நுட்ப ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் குதிக்கலாமென்று மேலதிக சுகாதாரசேவை சுப்பிரிண்டன் டாக்டர் கே சற்குரு நேற்றிரவுசொன்னார்(கா நி)

# "பண்டிதர் பரீட்சையை பல்கலைக்கழகம் நடத்தட்டும்"

## உயர் கல்விச்சபைக்கு மகஜர்

பருத்தித்துறை, வியாழன்

''சிங்கள-தமிழ்ப்பண்டிதர் மீது அரசாங்கம் கொண்டுள்ள மாற்றாந்தாய் மனப்பான்மையை நீக்கவும். சிங்கள-தமிழ் கலாசாரத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்தவும், சிங்கள-தமிழ்பண்டிதர்பரீட்சைகளைப் பல்கலைக்கழகமேயேற்று நடாத்துவதே சிறந்த வழியாகும்.''

இவ்வாறுஅகிலஇலங்கைப் பண்டிதர்சங்கம்உயர்கல்விச் சபைத்தலைவருக்கு அனுப்பியுள்ள ஒரு மகஜரிற் குறிப்பிட்டுள்ளது. அம்மகஜர் கூறுவதாவது.

''தமிழகத்தில் மதுரைத் தமிழ்ச்சங்கம் நடாத்திவந்த பண்டிதர் பரீட்சைகளையும் கரந்தைத் தமிழ்ச் சங்கம் நடாத்திவந்த வந்த புலவர் பரீட்சைகளையும் இன்றுஅண்ணமலைப்பல்கலைக்கழகத்திடம் கொடுக்கும் தறுவாயிலுள்ளன. அதேபோல யாழ் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கமும், கொழும்புத்தமிழ்ச்சங்கமும் இப்பரீட்சைகளை இலங்கைப்பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்தால் கல்வித்தரத்தில் ஒருமைப்பாடும் மேற்படி பட்டத்திற்கு உயர்ந்த மதிப்பும் அந்தஸ்தும் ஏற்பட இடமுண்டு. பண்டிதரை சம்பள விஷயத்தில் பட்டதாரிகள் எனக்கணிப்பதிலும் தயக்கமேற்படாது.''

## அடிகாயத்துடன் அனுமதிக்கப்பட்டவர் மரணமானார்

யாப்பாணம், வெள்ளி

அடிகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுவதிக்கப்பட்ட கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த வேலன் கணபதி [62வயது] என்பவர் 15 நாட்களின் பின் மரணமானர். பருத்தித்துறை மாஜிஸ்திரேட் ஸ்தலவிசாரணை நடத்தினர். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ் கனகரத்தினம் ஆஸ்பத்திரியில் சாட்சியங்களைப் பதிவு செய்தபின் பிரேத பரிசோதக்கு உத்தரவிட்டார்.

(கா. நி)

## வாடி வீட்டை திருத்துக'

அல்லைப்பிட்டி, வியாழன்

'கடந்த பலவருடங்களாக சீர்திருத்தப்படாத நிலையில் இருக்கும் ஊர்காவற்றுறை வாடி வீட்டை உடனடியாக புனருத்தாரணம் செய்யும்படி' ஊர்காவற்றுறைப்பட்டின சபையினர் அரசாங்கத்தைக்கேட்டுள்ளனர். அவர்களது கோரிக்கையில் 'வடக்கே வரும் உல்லாசப்பிரயாணிகள் இவ்வாடி வீட்டின் சீர்கேட்டினால் தங்குவதற்கு மனமின்றி திரும்பி விடுகின்றார்களெனவும் உடனடியாக உல்லாசப்பிரயாணிகளைக் கவரும் வகையில் நவீன வசதிகளுடன் இதைத் திருத்தி அமைக்கவேண்டுமெனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாஷிங்டன் நவ 27

வியட்னாம் போரில் இதுவரை 40,000 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுவீப்முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று நீர்கொழும்பில் இழுக்கப்பட்ட 274வது தேசிய சுவீப்முடிவுகள்:-

**1-வது பரிசு**

36 T 0208 ரூ-100,000

**2-வது பரிசு**

30 D 0429 ரூ. 40,000

**3-வது பரிசு**

08 S 0756 ரூ. 10,000

# பொய் வழக்குத் தொடர்ந்த பெண்ணுக்கு அபராதம்

மட்டுவில் வியா

தாலிக்கொடியை ஒளித்து வைத்துவிட்டு தன்னிடம் பலாத்காரமாக யாரோஅடித்துப்பறித்ததாகப் பொய் முறைப்பாடு பதிவு செய்ததாக ஒருபெண்மீது சாவகச்சேரிப்பொலிசார் குற்றம் சாட்டித் தொடர்ந்த வழக்கில் பெண்ணிற்கு மாஜிஸ்திரேட் ரூபா 75 அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

கைதடி நுணுவிலைச் சேர்ந்த பவளம்மா பேரம்பலம் என்பவர் 7 பேர் சேர்ந்து பலாத்காரமாகதன்னுடைய 1,500 ரூபா பெறுமதியான தாலிக் கொடியை அடித்துப் பறித்ததாக சாவகச்சேரிப் பொலிசில் ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்தார்

இந்தப்புகார்சம்பந்தமாக பெண்ணின் சாட்சியங்களைப் பதிவு செய்த சார்ஜன்ட் இராஜரத்தினத்திற்கு இவரின் வாக்கு மூலங்கள் சந்தேகத்தை ஏற்படுத்தவே பெண் வைத்திய பரிசோதனைக்கு அனுப்பப்பட்டார். மேலும் சந்தேகம் அதிகரிக்கவே மேற்படி பெண்ணின் வீட்டைப் பரிசோதனை செய்தபோது குறிப்பிட்ட தாலிக்கொடி அவர் பெட்டகத்தினுள் கண்டெடுக்கப்பட்டது. அதையடுத்து பொய் முறைப்பாடு செய்த குற்றத்திற்காக பவளம்மா மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

# 'எழுத்தாளர்கடமை'

மல்லாகம், வியாழன்

அழகு அகத்திலும் வேண்டும் புறத்திலும் வேண்டும். எழுத்தாளர்கள் புற அழகிலும் சற்றுக் கவனம் கொள்ளல் வேண்டும். படைப்புக்களைக் கவர்ச்சியாக நூலுருவில் வெளியிடல் வேண்டும் என்பது இக்கால நியதியாகி வருகிறது. இதனைப் புறக்கணிக்கின்ற எழுத்தாளர்களின் படைப்புகள் பொது மக்களாற் புறக்கணிக்கப் படுகின்றன.

இவ்வாறு அம்பிப் பாடலின் அறிமுக விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய கவிஞர் வி. கந்தவனம் குறிப்பிட்டார். யாழ் இலக்கிய வட்டத்தினால் நடாத்தப் பட்ட இவ்விழா மலாயன் கபே மேல்மாடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கவிஞர் வி. கந்தவனம் தொடர்ந்து பேசுகையில் அச்சுக்கலை மிகவும் வளர்ந்தோங்கிவிட்ட இக்காலத்தில் நூல்களை அழகாகவெளியிட வேண்டியது எழுத்தாளர்களது கடனாகும். அவசரப் படைப்புக்களை நிறுத்தி, காலம் தாமதிக்கப் பட்டாலும் படைப்புக்களைக் கவினுற அச்சேற்றுதல் நம் கடனாகும் என்று கூறினர்.

வைத்திய கலாநிதி வாமதேவன் அறிமுகவுரை நிகழ்த்தினார். முதற் பிரதியை ஏழாலை மகாவித்தியாலய அதிபர் திரு. சு. அம்பலவாணர்வாங்கினார். கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை, கவிஞர் சுந்தரம்பிள்ளை ஆகியோரும் பேசினர். கவிஞர் அம்பி நன்றியுரை கூறினர்.

# லொறியால் மோதுண்டவர் மரணமானார்

யாழ்ப்பாணம், வெள்ளி

நேற்று முன்தினம் உடுப்பிட்டிச் சந்தியில் லொறியினல் மோதப்பட்டு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த எஸ். விசுவலிங்கம் என்பவர் நேற்றுக் காலைமரணமானர்.

யாழ் முஸ்லிம் வட்டாரத்தில்

# ஆயுதங்கள் தாங்கிய கைகலப்பு; காயமடைந்த மூவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், வெள்ளி

பயங்கர ஆயுதங்கள், பொல்லுகள் சகிதம் நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் முஸ்லிம் பகுதியில் நடைபெற்றதாகக் கூறப்படும் கைகலப்பொன்றில் மூன்று வாலிபர் படுகாயமடைந்தனர்.

நாகூர் பிச்சை, செந்தி மதார், சல்மர் ஆகிய மூவருமே மண்டையில் பலத்த காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடை ஒன்று உடைக்கப்பட்டதாகவும், இரண்டு சகோதரர்கள் உட்பட மூவர் தம்மை இரும்புக் கம்பிகளாலும் பொல்லுகளாலும் தாக்கியதாகவும், காயமடைந்தவர்கள் பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் எவரும் கைதாகவில்லை. யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸ் பகுதியினர் இது சம்பந்தமாக விசாரணை நடாத்தி வடுகின்றனர். (கா. நி)

# கல்கமுவாவில் நடைபெறும் கலைவிழா

யாழ்ப்பாணம், வியா.

கல்கமுவா நீர்ப்பாசனப் பயிலுநர் கலாசாலைத்தமிழ்க் கலாமன்றத்தின் கலைவிழா இம்மாதம் 30-ம் திகதி கலாசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

பிற்பகல் 2 மணிக்கு தமிழ்த்தாய்வாழ்த்துடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் அருவி' மலர் வெளியீடும் இடம்பெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

குருநாகலில் உள்ள சவர்க்காரக் கொம்பனி ஒன்றிற்கு சவர்க்காரம் செய்யக் கைதேர்ந்த தொழிலாளி ஒருவர்தேவை. விண்ணப்பிக்கவும் Epsilon Consaltants Ltd. Macan Markar Building. Prince Street, Colombo -1

1572

### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு. 1969டிசம்பர் பரீட்சை G. C. E. (O/L) சரித்திர பாட வழிகாட்டிவினு-விடை இரண்டாம் பகுதி: விலை 3 ரூபா. ஸ்ரீ காந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

1573

### தவறிவிட்டது

லைசன்ஸ், இன்சூரன்ஸ்சும் ஸ்ரான்லி ரேட்டில் தவறிவிட்டன. கண்டெடுப்பவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். வெ. அல்பேட், எட்ஞ கோப்பறேசன், யாழ்ப்பாணம்.

1571

### WANTED

1. WANTED an experienced Lorry Driver with at least ten years service. Cash Security Rs 500/-. Salary Rs. 150/- per mensem plus commission on Sales. Apply with recent testimonials to Autos Ltd, Jaffna before 30-11-69.

2. WANTED a Store-keeper for our Agro Chemicals Division. Cash Security Rs 2,500/-. Salary Rs. 200/- per mensem. Candidates with knowledge of Agro-Chemicals and at least five years experience need. Apply with recent testimonials to Autos Ltd, Jaffna before 30-11-69.

1568


## நீரில் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம், வியாழன்

நாச்சிமார் கோவிலடியில் உள்ள ஒரு குளத்தில் சில தினங்களின்முன் குளிக்கச் சென்ற வயோதிபர் தண்ணீரில் மூழ்கி மரணமானுர்.

கந்தன் சின்னத்தம்பி (வயது 75) என்ற வயோதிபரின் மரண விசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது. மரண விசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் விசாரணையின் பின் விபத்தினுல் ஏற்பட்ட மரணம் எனத்தீர்ப்பளித்தார்.


### விற்பனையாளர் தேவை

வலிகாமம் வடக்குப் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு இரும்புக்கடை அனுபவமுள்ள விற்பனையாளர் தேவை. கீழ்க்காணும் தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

1. வயது, 20 தொடக்கம் 35 வயது வரை.
2. கல்வி ஜே. எஸ். சி. (க. பொ. த. ப).
3. அனுபவம்: இரும்புக் கடையில் திருப்திகரமான அனுபவம் இருக்க வேண்டும்.

நிர்வாகக் காரியதரிசி,
வலி-வட பல. நோ. கூ. ச. சமாசம்,
1845 சுன்னுகம்.

### தேவை
### பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை கன்ரீன்

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் கூட்டுறவு மூலம் நடாத்தப்படும் சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்குவிண்ணப்பம் கோரப்படுகின்றது.

இத்தொழிற்சாலையில் கடமையாற்றும் சுமார் 300ஊழியர்களுக்கு தேநீர், உணவு மற்றும் சாப்பாட்டுப் பதார்த்தங்கள் வழங்க அனுபவம் உள்ளவர்கள் நற்சாட்சிப் பத்திரங்களுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு 14-12-1969 முன் விண்ணப்பம் அனுப்புதல்வேண்டும்.

ந. ராமநாதன்,
தலைவர்,
பரந்தன் இரசாயனக் கூட்டுறவுக் கன்ரீன்,
பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை.
1844 பரந்தன்.


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 28—11—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 பண்ணுரிந்தமிழ், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 செய்திச்


★ உறுதியானதும்
★ நீடித்து உழைப்பதும்
★ தன்னிகரற்றதுமான

# "வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு—பித்தளை - மரஸ்குறு ஆணிகள்

நீங்கள் வாங்குவதனுல்
ஒரு சிறந்தபொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்:

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனக தெரு, கொழும்பு-12.
தொலைபேசி: 33143—4
கிளை- 138 கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


திருமலை தெரிவுக் கோஷ்டி - கொழும்பு லீக் மோதல்!

# திருமலை ஒரு கோலால் வென்றது

திருக்கோணமலை, வியா.

இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தினுல் நடாத்தப்பட்டு வரும் அகில இலங்கை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் திருமலை தெரிவுக் கோஷ்டியும் கொழும்பு லீக் கோஷ்டியும் திருமலை ஸ்ரேடியத்தில் மோதிக் கொண்டன.

விறுவிறுப்பாகவே ஆரம்பமாகிய இப்போட்டியில் இருதரப்பு வீரர்களும் மிக உற்சாகமாக விளையாடினுர்கள். இருபக்க வீரர்களும் எவ்வளவோ திறமையைக் காட்டியும் இடைவேளைவரை கோல் போடாமலே ஆடிக்கொண்டிருந்தனர்

இடைவேளைக்குப்பின் சுமார் பத்து நிமிடங்கள் சென்றதும் திருமலை தெரிவுக்கோஷ்டி வீரனுன சானு என்பவர் ஒரு கோலைப் போட்டு ஆட்டத்தில் முதல் கோலைப்போட்ட பெருமையைத் தட்டிக்கொண்டார். இதற்குப்பின் எக்கோஷ்டியினரும் கோல்போடவேயில்லை.

போட்டியில் திருமலை தெரிவுக்கோஷ்டி எதிர்க் கோஷ்டியை 1—0 கோல்களால் தோற்கடித்தது. மன்னர் விளையாட்டு அதிகாரி திரு. தம்பிராசா இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

## நாவலர் பேச்சுப்போட்டி

கோப்பாய், வியாழன்

இருபாலை சைவ பரிபாலனசபையின் கொழும்புக் கிளைச் சங்கம் நடாத்தவுள்ள நாவலர் பேச்சுப் போட்டிகள் எதிர்வரும் நாவலர் குருபூசைத் தினத்தன்று கோப்பாய் அரசினர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

## புதிய நிர்வாகிகள்

வேலணை, வியாழன்

வேலணை முதலாம் வட்டார தமிழரசுக் கட்சி வாலிப முன்னணிக் கிளை நிர்வாகிகள் தெரிவுக் கூட்டம் பண்டிதர் கா. பொ இரத்தினம் தலைமையில் நடைபெற்ற போது பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு [illegible] தம்பு,
உபதலைவர்: திரு க தம்பா

## பஸ்களில் ஜேப்படி

மீதோட்டமுல்லை, வியா.

கொழும்பு பஸ் போக்குவரத்தில 'பிற்பொக்கற்' காரர்களைப் பிடிக்கும் வேட்டையில் பொலிஸார் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். கொழும்புபொலிஸ் தலைமைப் பீடத்தினுல் நியமிக்கப்பட்டிருக்கும் விசேட பொலிஸ் பிரிவொன்று இந்த வேட்டையில் ஈடுபட்டுள்ளது.

பாலத்துறை, ஊறுடவத்தை, ஆமர்வீதி மருதானை ஆகிய இடங்களில் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளதன் காரணமாக பஸ் வண்டிகளில் ஜேப்படியில் ஈடுபட்ட பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இப்பொழுது ஜன நெருக்கமான பஸ் வண்டிகளை பொலிஸ் றேடியோக் கார்களும் ஜீப் வண்டிகளும் பின்தொடர்ந்து கொண்டிருக்கின்றன. (வி. நி)

வீதிகளமைக்க

## 70 அன்னிய ஸ்தாபனங்கள்

கோட்டை, வியாழன்

இலங்கை வீதிகள பலவற்றைத் திருத்தியமைப்பதற்கு 70 அன்னிய பொறியியல் வேலைகள் செய்யும் ஸ்தாபனங்கள் முன்வந்துள்ளன.

மேற்படி ஸ்தாபனங்களைக் கொண்டு வீதிகளைத் திருத்துவதற்கான ஒரு புதிய 10 வருட திட்டத்தை பொது வேலையமைச்சு உருவாக்கியுள்ளதாகவும் அதற்கு 900,000,000 ரூபா செலவாகுமெனவும் தெரிகிறது.

## வாஷிங்டன் பொருட்காட்சியில் இலங்கை பொருட்கள்

கோட்டை, வியாழன்

அடுத்த வருடம் வாஷிங்டனில் நடைபெறவிருக்கும் கண்காட்சியொன்றில் இலங்கையின் கலாச்சார சிறப்பு வாய்ந்த பொருள்கள் காட்சிக்கு வைக்கப்படும் இதில் யானைத் தந்தத்தில் சிற்பவேலைகள் செய்யப் [illegible] பொருள்களுமிடுக்கும்

## தலைமைப்பீடத்துக்கு புகார்

உடுப்பிட்டி, வியாழன்

கரணவாய் குஞ்சர்கடைச் சந்தியிலிருந்து சோளங்கன் மகாவித்தியாலயம் செல்லும் பிரதான வீதி சுமார் 15 வருட காலமாகத் திருத்தப்படாமல் கவனிப்பாரற்று இருக்கின்றது. வீதிக்குப் போடப்பட்டிருந்த 'தார்' மறைந்து கற்களும், குண்டும் குழியுமாக வீதி காணப்படுவதால், வாகனங்களும், பொதுமக்களும் போக்குவரத்துச் செய்யமுடியாமல் அவதியுறுகின்றனர்.

இது சம்பந்தமாக இப்பகுதிப் பொதுமக்கள் பொதுமராமத்து இலாகா தலைமைப் பீடத்துக்குப் புகார் செய்துள்ளனர்.


**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30மணி
சிவாஜி - சரோஜாதேவி நடித்த
**பாகப்பிரிவினை**
4-30 p. m Only
MINNESOTA CLAY
(English)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்-விஜயகுமாரி
முத்துராமன்-வாணிஸ்ரீ நடித்த
**டீ ச் ச ர ம் மா**
முக்கிய கவனிப்பு
மாதர்கள் எல்லா வகுப்புகளுக்கும் அரைக்கட்டணத்துடன் அனுமதிக்கப்படுவர்

வல்வெட்டித்துறை
**றஞ்சனு தியேட்டர்**
தினசரி 2-30 6-30, 9-30.
நம்பியார் - ஆனந்தன் பத்மினி நடித்த
**நீயா நானு?**

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
என். டி. ராமராவ் நடித்த
**சபாஷ் ராமு**

**REGAL** JAFFNA
Daily 4-45, 7, & 9-45 p.m
George Ardisson
in
COUNTDOWN TO DOOMSDAY
(EastmanColor)


திருமலையில்

# தொழில் நுட்பக்கல்லூரி நிறுவும் முயற்சி தோல்வி

திருக்கோணமலை, வியாழன்

திருக்கோணமலை மாவட்டத்தில் ஒரு தொழில் நுட்பக்கல்லூரி நிறுவுவதற்கு மாவட்டக்குழு கடந்த ஒரு வருடகாலமாக எடுத்துவந்த முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லையாம்.

திருமலையில் ஒரு தொழில் நுட்பக்கல்லூரி நிறுவவேண்டியது அத்தியாவசியமென்றும், படித்த இளைஞர்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்காக மேற்கொண்ட இம்முயற்சி நிறைவேற முடியாமல் இருக்கின்றதென்றும் கொழும்பில் இருக்கும் திருமலை அபிவிருத்திக்குழு இது விஷயமாக எதுவித முயற்சியும் எடுக்காமல் இருக்கின்றதென்றும், உப்புவெளியில் தொழில் நுட்பக்கல்லூரி நிறுவுவதற்கென அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட காணி தற்சமயம் கல்வி இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதென்றும் திருக்கோணமலைமாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## வரவேற்பு ஏற்பாடு

சுழிபுரம், வியா.

பொன்னலை கிராமத்தைச் சேர்ந்த புதிய சமாதான நீதிபதி திரு. ஜே. எம். மயில்வாகனத்துக்கு பொன்னலை மக்கள் ஓர் வரவேற்பு உபசாரமும் பாராட்டு விழாவும் நடாத்த ஏற்பாடு செய்து வருகின்றனர்.

## 15,000 பேர் விண்ணப்பம்

கோட்டை, வியாழன்

நாட்டிலுள்ள கனிஷ்ட பல்கலைக்கழகங்களில் கல்வி கற்க விரும்பி 15,000 ஜீ.சீ.ஈ உயர்தரப்பரீட்சையில்சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள். ஆனுல் 5 கனிஷ்ட பல்கலைக்கழகங்களும் 1000 மாணவர்களுக்குமேல் அனுமதிப்பதற்கு இயலாதனவாயுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் அடுத்தமாதத்தில் முடிவடையுமென அறிவிக்கப்பட்டுள்ளன.

## 5000 குளங்கள் திருத்தப்படும்

கோட்டை, வியாழன்

நீர்பாசன இலாகா 5000 சிறிய பாழடைந்த குளங்களைத்திருத்துவதற்கு ஆரம்பித்துள்ளது. இக்குளங்கள் திருத்தியமைக்கப்பட்டதும் ஏறக்குறைய 250,000 ஏக்கர் நிலப்பரப்பு பயிர்ச்செய்கைக்கு உகந்ததாகும்.

இதனுல் 8000கிராமங்கள் நன்மையடையுமெனவும் மேற்படி இலாகா தெரிவித்துள்ளது. இந்த 5000 குளங்களில் ஒவ்வொன்றும் 50 ஏக்கர் நெல்வயலுக்கு நீர்பாசனம்அளிக்கத்தக்கவை எனத் தெரிகிறது.


**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்திரைகளில்
100 நாட்களுக்குமேல் ஓடிய
வெற்றிச்சித்திரம்
**எதிர் நீச்சல்**

**ராணி** (யாழ்ப்பாணம்) [தினசரி 8 காட்சிகள்]
ஜெமினி - சரோஜாதேவி
எஸ்.எஸ் ஆர்.-ராஜசுலோஜனு நடித்த
**குல விளக்கு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரும்பு வியாபாரிகள்

450, பழைய சோனக தெரு, கொழும்பு-12.

தொலைபேசி: 33143—4

கிளை- 138 கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 530



## யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி

உங்கள் குடும்பம் சிறக்க
உங்கள் நாடு செழிக்க
உங்கள் வங்கியில் சேமியுங்கள்

1 **சேமவைப்பு**

தினமும் பணம் போடுவதற்கும் எடுப்பதற்கும் வசதியுள்ள சேமவைப்பு. இச்சேமிப்பில் மாதம் மாதம் இருக்கும் குறைந்த மிகுதிப்பணத்திற்கு 3 3/4 % வட்டி கொடுக்கப்படும். மிகவும் தெரிந்த வாடிக்கைக்காரர்களுக்கு அவர்களின் காசோலை, காசுக்கட்டளை முதலியன இச்சேமிப்புக் கணக்கின் மூலம் வசூல் செய்துகொடுக்கப்படும்.

2 **மாதாந்த தொடர் சேமவைப்பு**

ரூபா 1/- தொட்க்கம், அதன் எத்தனை மடங்குகளும் இச்சேமிப்பு முறையில் 60 மாதங்களுக்கும், 81 மாதங்களுக்கும், 120 மாதங்களுக்கும் மாதவீதம் பணம்போட்டுச் சேமிக்கலாம். உதாரணமாக - ரூபா 1/- மாதம் மாதம் கட்டுபவர் 60 மாதமுடிவில் ரூபா 70/- பெறுவார், 81 மாதமுடிவில் ரூபா 100/- பெறுவார். 120 மாதமுடிவில் ரூபா 163/- பெறுவார்.

3 **நிலைச்சேமவைப்பு**

இச்சேமவைப்பில் எவ்வளவு தொகையும் போடலாம். 12 மாத சேமவைப்புக்கு 4% வட்டிகொடுக்கப்படும். 60 மாத சேமவைப்புக்கு 5% வட்டி கொடுக்கப்படும். 120 மாதசேமவைப்புக்கு 5 1/2% வட்டி கொடுக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு அண்மையிலுள்ள கிளை வங்கிகளுடன் தொடர்புகொள்ளவும்.

**கிளைகள்**

யாழ்ப்பாணம் -59, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
பரந்தன் - கண்டி வீதி, பரந்தன்.
சுன்னாகம் - காங்கேசன்துறைவீதி, சுன்னாகம்
நெல்லியடி - கரவெட்டி வீதி, நெல்லியடி-
சங்கானை - சங்கானை
சாவகச்சேரி - கண்டிவீதி, சாவகச்சேரி.
ஊர்காவற்றுறை - ஊர்காவற்றுறை.
வலி-கிழக்கு - பருத்தித்துறை வீதி, புத்தூர்

**தலைமைக்காரியாலயம்:**

59, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தொ. பே. எண். 633


இ ஸ் லா மி ய ந ற சி ந் த னை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 பண்ணுறித்தமிழ், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 நானையசந்தி, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 வயலினிசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடக இசை, 7-35 முத்திநெறி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கதாப்பிரசங்கம், 10-30 செய்திச்சுருக்கம்.

வாலிப முன்னணிக் கிளை நிர்வாகிகள் தெரிவுக் கூட்டம் பண்டிதர் கா. பொ இரத்தினம் தலைமையில் நடைபெற்ற போது பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு பொ தம்பு, உபதலைவர்: திரு க தம்பாபிள்ளை, காரியதரிசி: திரு ச கதிரவேலு, உபகாரியதரிசி: திரு நா செல்லையா, பொருளாளர்: திரு ப கந்தையா. மற்றும் 11 நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## தொல்புரம் மக்கள் கோரிக்கை

சுழிபுரம், வியாழன்

தொல்புரம் உபதபால் கந்தோருக்கு தொலை பேசி இணைப்புக்கள் அமைத்துத் தருமாறு வட்டுக்கோட்டை ஆட்சி மன்ற உறுப்பினர் மற்றும் தபால் தந்தி அதிகாரிகளுக்கு அனுப்பிய ஒரு மகஜரில் தொல்புரம் மக்கள் கேட்டிருக்கின்றனர்.

கண்காட்சியொன்றில் இலங்கையின் கலாச்சார சிறப்பு வாய்ந்த பொருள்களு காட்சிக்கு வைக்கப்படும் இதில் யானைத் தந்தத்தில் சிற்ப வேலைகள் செய்யப்பட்ட பொருள்களுமிருக்கும்


REGAL JAFFNA

Daily 4-45, 7, & 9-45 p.m.

George Ardisson

in

COUNTDOWN TO DOOMSDAY

(EastmanColor)



ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

ஜெமினி - சரோஜாதேவி

எஸ்.எஸ் ஆர்.-ராஜசுலோஜனு நடித்த

# குலவிளக்கு



"ராதா"

# சக்தி பூஜா அகர் பத்தி

★ ஆலயங்கள்

★ திருமண வைபவங்கள்

★ இன்ப நிகழ்ச்சிகளிலும்

உங்கள் இல்லங்களை வாசனையால் பரிமளிக்கச் செய்வது

ராதா சக்தி பூஜா அகர் பத்திகளே!

ஏக விநியோகஸ்தர்கள்:

எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி

53, கே.கே.எஸ்.ரோட், யாழ்ப்பாணம்.

160, செட்டியார்தெரு கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068.


# இன்றைய பலன்

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

கார்த்திகை மாதம் 13-ம் திகதி (28-11-69)

**மேஷம்-** வணிகர்களுக்கு வியாபாரவிருத்திக்கு இடம் உண்டு புதிய முயற்சிகள் இன்று கைகூடும். செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

**ரிஷபம்-** வீட்டில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நடைபெறும், விருந்துபசாரங்களும் உண்டு. சிலருக்கு வாகனஇலாபமும் கிடைக்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் உண்டு.

**மிதுனம்-** எதிர்பாராதவிளைவுகளின் மூலம் செலவுகள் அதிகமாகும். சிலர் வாழ்க்கையில் கடன்பட நேரிடும் பிணிக்கு இடம்கொடாது இருக்கவும்.

**கடகம்-** அவசரமுடிவினால் அரிய சந்தர்ப்பத்தை இழக்கக்கூடும் ஆத்திரம் வழக்குவிவகாரங்களில் ஈடுபடச் செய்யும். பூமிப்பிணக்கை தவிர்க்கவும்.

**சிம்மம்-** வீட்டில் சுபகருமங்கள் இடம்பெறும். பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர். கைத்தொழில்புரிபவர்களுக்கு நல்ல வருவாய் உண்டு.

**கன்னி-** சுற்றுவட்டாரத்தில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறுபிணிக்கும் இடம்உண்டு. ஏாயுப்பதார்த்தங்களை தவிர்ப்பதுடன் தெய்வநம்பிக்கை நன்மை தரும்.

**துலாம்-** அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும். அறவழியில் ஆர்வம்பிறக்கும். ஆக்கபணியில் கவனம் செலுத்தவும்.

**விருச்சிகம்-** புத்திக்கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கும். புத்திரர்களால் புகழும் கிடைக்கும். இறைநம்பிக்கையுடன் இல்லத்தின் அமைதிதவழும்.

**தனுசு-** நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படலாம் கடமையாற்றும் இடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளை தவிர்த்துக்கொள்ளவும். சமயோசிதபுத்தியினால் எதையும் சமாளிக்கலாம்

**மகரம்-** சந்திப்பின்மூலம் பயன்உள்ள தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளுவீர்கள். காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும் விருந்து ஒன்று கிடைக்கும். மகிழ்ச்சியான தினம்.

**கும்பம்-** அரச பயத்துக்கு இடம் இடம்உண்டு. வழக்குவிவகாரங்களில் மாட்டிக்கொள்ளவேண்டாம். மின்னியல், பொறியியல்பகுதிகளில் கடமையாற்றுபவர்கள் மிகவும் கவனம்செலுத்தவும்.

**மீனம்-** கைகொடுத்து உதவுவதற்கு தந்தை முன்வருவார். காரியசித்தியும் கிட்டும். நீண்டநாள் எதிரிகள் இன்று மீண்டும் நண்பர்கள் ஆவார்கள். திருப்தியானதினம்.


இப்பொழுது நடைபெறுகிறது

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 ம ணி.

பிரிபோயா, போயா 4 காட்சிகள்

★ ரவிச்சந்திரன்
★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ்
★ சோ
★ ஆனந்தன்
★ குமாரி சச்சு
★ மனோரமா
★ தேவகி

நடித்த

முக்தா பிலிம்ஸாரின்

# நினைவில் நின்றவள்

இசை வி குமார் | கதைவசனம் சோ | டைரக்ஷன் வி சீனிவாசன்



இன்று குதூகல ஆரம்பம்

# -யாழ்.மனோகரா தியேட்டரில்-

எம். பி. எஸ். சினிமாஸ் லிமிட். அளிக்கும்

மற்றும் 21 சினமாஸ் திரைகளிலும் காட்சியளிக்கிறது

# பாராவல்லு

(சிறந்த சிங்களச் சித்திரம்)

காமினி பொன்சேகா, அனுலா கருணாதிலக, ஜோ அபேவிக்ரம, ருக்மணிதேவி, எடி ஜயமன்ன

ஆகிய சிறந்த சிங்கள நடிகர்களுடன்

தமிழ் நடிகர் ஜயகாந்த் நடிக்கும் படம் இது.

இவர் இப்படிக் கூறுகிறார்

இலங்கையில் தயாரிக்கப்பட்ட படம் இது என்பதை என்னால் நம்பமுடியவில்லை.

ச. சிற்றம்பலம்

உள்நாட்டு இறைவரி ஆணையாளர்



இப்படம் பற்றி இவர் கூறுவது

வளர்ந்து வரும் இலங்கை சினிமாவுக்கு ஒளியூட்டுவதாய் அமைந்திருக்கும் இப்படத்தை முழுமனதுடன் தமிழ் மக்கள் வரவேற்பார்கள் என்பதுஎனது எண்ணம்.

வி. எஸ். துரைராசா

கட்டிடக் கலைஞரும் V. S. T. பிலிம்ஸ் அதிபரும்

டைரக்ஷன்: சுதாஸ்மஸ்கோருல

இசை: சோமதாச எல்பிட்டிலே

பாடசாலைப் பிள்ளைகளுக்கானவிசேஷகாட்சிகளுக்கு யாழ். மனோகரா தியேட்டர் மனேஜருடன் தொடர்புகொள்ளவும்.

தயாரிப்பு: சைமன் மறவனரொட

ஒலிப்பதிவு டைரக்ஷன்: டி. பி. நிகால்சிங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு ஆயுதங்களை உடனடியாக தடை செய்ய வேண்டும்

## ஐ. நா. வில் 12 நாடுகள் கோரிக்கை

வாஷிங்டன், நவ. 27

அணு ஆயுத சோதனைகளையும் அணுவாயுதங்களைக் குவித்து வைப்பதையும் உடனடியாகத் தடை செய்ய வேண்டும் என்று பத்து நாடுகள் ஐ. நா. அரசியல் கமிட்டிக்கு ஒரு தீர்மானத்தை தாக்கல் செய்திருக்கின்றன.

ஹெல்சிங்கியில் நடைபெறும் ஆயுதக் குறைப்பு பேச்சு வார்த்தைகளை இந்த நாடுகள் வரவேற்றிருப்பதுடன் மாநாட்டின் வெற்றிக்கு இந்த நடவடிக்கை நல்ல சூழ்நிலையை உருவாக்கும் என்று தெரிவித்திருக்கின்றன.

ஹெல்சிங்கியில் அமெரிக்காவும் - சோவியத் யூனியனும் அணு ஆயுதக்குறைப்பு பற்றி நடத்திவரும் பேச்சு வார்த்தைகள் மிகவும் ஊக்கமளிப்பதாக விருக்கிறதென்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. வில்லியம் ரோஜர்ஸ் தெரிவித்திருக்கின்ருர்.

இந்த மாநாடு கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முடிவடையும் என்று கருதப்படுகின்றது. அனேகமாக இந்தப் பேச்சு வார்த்தைகள் வெற்றியளிக்கும் என்று அனேகமாக ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகலாம் என்றும் கருதப்படுகின்றது.

---

தென் வியட்னமில்

## யு.எஸ்.ராணுவ அட்டூழியம்: அதிபர் நிக்ஸன் கண்டனம்

நியுயோர்க், நவ. 27

தென் வியட்னமில் அமெரிக்க சிப்பாய்கள் பொது மக்களில் 500 பேருக்கு மேற்பட்டவர்களைக் கொன்றொழித்ததாகக் கூறப்படும் சம்பவம் குறித்து அதிபர் நிக்ஸன் கடுமையாகக் கண்டனம் தெரிவித்திருக்கிருர்

அமெரிக்க மக்களின் மனச்சாட்சிக்கு இது ஒரு சவால் என்று அதிபர் கூறினார்.

இந்தச் சம்பவம் அமெரிக்க ராணுவக் கொள்கைக்கு முற்றிலும் முரண்பட்டதாகும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு. நிக்ஸன் கூறினார்.

தென் வியட்னாம் கிராமங்களில் அமெரிக்க சிப்பாய்கள் புரிந்துள்ள இந்த அட்டூழியங்கள் தமது நிர்வாகம வருவதற்கு முன்பதாகவே இடம் பெற்றிருப்பதாகவும் தமது பாதுகாப்பு அமைச்சருக்கு இந்த ஏப்ரல் மாதம் தான் இதுபற்றிய தகவல் கிடைத்ததாகவும் அதிபர் நிக்ஸன் தெரிவித்தார்.

தென் வியட்னமில் அமெரிக்க சிப்பாய்கள் நடத்தியுள்ள இந்த அட்டூழியங்கள் குறித்து ஏற்கனவே ஒரு அதிகாரி ராணுவ நீதிமன்றத்தின் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருக்கிருர்

அமெரிக்க செனட் முப்படைக்குழுவொன்றும் இது பற்றி இரகசிய விசாரணை ஆரம்பித்திருக்கின்றது.



---

### மத்திய வங்கி நடவடிக்கை வடமராட்சியில் கணக்கெடுப்பு

உடுப்பிட்டி, வியாழன்

கிராமப்புற விவசாயிகளுக்கு கடன் உதவி வழங்க மத்திய வங்கி நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. கிராமங்கள்தோறும் வங்கிக் கிளைகளை நிறுவிக் கடன் உதவி வழங்குவதின் மூலம் விவசாயிகளை ஊக்குவிக்கலாம் எனக்கருதப்படுகிறது.

இதற்கு முன்னேடியாக வடமராட்சிப் பகுதியில் சுமார் இருபது மத்திய வங்கிக் கணக்கீட்டுப் புள்ளி விபர ஆராய்ச்சியாளர்கள் கிராமங்கள் தோறும் சென்று விவசாயிகளை நேரில் சந்தித்து அவர்களின் உரையாடலைப் பதிவு செய்து வருவதோடு விவசாயிகளைப் புகைப்படமும் பிடித்து வருகின்றனர்.

கரணவாய், கரவெட்டி, அல்வாய்ப் பகுதிகளில் திருவாளர்கள் வீ.கமலநாதன், என்.சிவபாலகணேசன், தயாநிதி, சின்னராசா ஆகியோர் இவ் வேலையில் ஈடுபட்டுளனர்.

---

### வலைக்களவு: தடுக்கவழி

புங்குடுதீவு, வியாழன்

''வலைத் திருட்டுக்கள் தொடர்ந்தும் நடைபெருமல் தடுப்பதற்கு வலைகளுக்குப் பகுதி பகுதியாக இரு நிறங்கள் போடவேண்டுமென்றும், வலைகள் திருடப்பட்டதும் உடன் பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் ஒரு தீர்மானம் தீவுப் பகுதி முன்னேற்றக்கழகத்தினரின் கூட்டத்தில் ஏக மனதாக நிறைவேற்றப் பட்டது.

ஊர்காவற்றுறை கழகக் காரியாலயத்தில் கழகத்தலைவர் வழக்கறிஞர் திரு. ப. கதிரவேலுதலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

---

## ''ஈராக் எல்லையில் இஸ்ரேல் தாக்குதல்

பாக்தாத், நவ. 27

ஈராக்கின் வடபகுதியில் இஸ்ரேலிய துருப்புகள் நேற்று கடுமையான தாக்குதல் ஒன்றைநடத்திஞர்கள். இரண்டு இஸ்ரேலிய விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாக ஈராக் அதிகாரிகள் அறிவித்தனர் ஆனல் தமது விமானங்கள் யாவும் பத்திரமாகத்திரும்பிவிட்டதாக இஸ்ரேலியர் கூறியிருக்கிருர்கள்.

ஜோர்டான் மீதும் இஸ்ரேலியர் நேற்று தாக்குதல்களை நடத்திஞர்கள். இந்தத் தாக்குதல்களை முறியடித்துவிட்டதாக ஜோர்டான் ராணுவத்தினர் அறிவித்தனர் இருஇஸ்ரேலியர் கொல்லப்பட்டதாகவும் அவர்கள் அறிவித்தனர்.

### யேமன் சவூதி அரபு சண்டை

தென்யேமன்-சவூதி அராபிய எல்லையில் புகைச்சல் ஏற்பட்டிருக்கின்றது. நேற்றிலிருந்து இருதரப்பு படைகளுக்கும் எல்லையில் மோதிக் கொள்வதாக செய்திகள்கிடைத்துள்ளன. இந்த மோதல்களை ஆரம்பித்ததாக இரு நாடுகளுமே ஒன்றையொன்று குற்றஞ்சாட்டுகின்றன. பலர் பலியாகியிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

---

## சீன அபாயத்தை இந்தியா சமாளிக்கும்

புதுடில்லி, நவ. 26

எந்த சீன அபாயத்தையும் சமாளிக்க இந்தியத் துருப்புகளுக்கு சக்தியிருக்கிறது என நேற்று முன்தினம் ராஜ்ய சபைக் கூட்டத்தில் இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சுவர்ண்சிங் கூறினார்.

'வடக்கு எல்லையில் சீனத் துருப்புகள் பெருமளவில் உள்ளனர். சமீபத்தில் அத்துருப்புகள் அதிகரிக்கப்பட்டதாக அறிகுறி இல்லை. நாகாலாந்துக்கு அப்பால் சும்பி பள்ளத்தாக்கில் சீனத் துருப்புகள் வழக்கமான பலத்துடன் உள்ளன' என்று கூறிய சுவர்ண் சிங் 'சீன உடனே தாக்குமெனத் தான் எதிர்பார்க்கவில்லை எனவும் ஆயினும் தாக்குதல் நடந்தால் அது திடீரென நடக்குமென்றும் அதைச் சமாளிக்கத் தயாராக இருக்கவேண்டும்' என்றும் சொன்னார்.

---

பருத்தித்துறை நகரசபைத் தேர்தல்

## வேட்பாளர் அறிமுகம்

**3-ம் வட்டாரம் (ரேகு)**

என். நடராசா (தமிழ்க் காங்கிரஸ்) திரு. நடராசா பருத்தித்துறை நகரசபையின் தற்போதைய தலைவராவார். புரக்டராகத் தொழில் நடத்திவரும் இவர் 1947ம் ஆண்டிலிருந்து பருத்தித்துறைப் பட்டினசபை ஆரம்பம் முதல் இன்று ... உழைக்கவிருப்பதாகவும் இவர் கூறுகிருர்.

**4ம் வட்டாரம் (தெனி)**

பி. ஆறுமுகம் (சுயேச்சை) பருத்தித்துறை நகரசபையின் தற்போதைய அங்கத்தவர். நகரசபையாவதற்கு முன்பு 6 வருடகாலம் அங்கத்தவராகவும், நகரசபையானதின் பின்பு 7 வருட...

---

## "பட்டாணியரை மறந்துவிட்டீர்களே"

### இந்திய எம். பி. க்களிடம் எல்லைக்காந்தி

புதுடில்லி, நவ 26

''மக்களுடைய சேவையே உங்களுடைய இலட்சியமாக இருக்கவேண்டும். அரசியல் அதிகாரம் நோக்கமாக இருக்கக் கூடாது சுதந்திரம் சோஷலிசம், ஜனநாயகம் என்பன ஏழை மக்களுக்கு நன்மையளிக்கக், கூடியனவாக இருக்க வேண்டும்.''

ஆட்சி மன்ற உறுப்பினர்களிடையே புதுடில்லியில் உரையாற்றிய எல்லைக் காந்தி கான் அப்துல் கபார் கான் மேற்கண்டவாறு கூறினர்.

இக்கூட்டத்தில் உபஜனதிபதி, பிரதமர் இந்திரா, சபாநாயகர் ஆகியோர் கலந்து கொண்டனர். 700 ஆட்சி மன்ற உறுப்பினர்கள் தங்களது மரியாதையை கான் அப்துல் கபார் கானுக்கு அளித்தனர்.

''இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்தபிறகு பட்டாணியர்களுக்கு உதவி அளிக்க இந்தியா தவறி விட்டது நாங்கள் நிராதரவாக விடப்பட்டோம். எங்களுக்குதவுவது உங்கள்கடமை அல்லவா? என்று மேலும் பேசுகையில் வினவெழுப்பிய எல்லைக்காந்தி 'நாட்டில் அன்பும், வகுப்பு சௌஜன்யமும், அமைதியும் ஏற்படச்செய்ய உதவுமாறு'' ஆட்சி மன்ற அங்கத்தவர்களைக் கேட்டுக்கொண்டார்.

---

### வாலிபர்களுக்கு காணி

வரணி, வியாழன்

150 வாலிபர்களுக்கு முத்தையன் கட்டில் காணி கிடைக்கவிருக்கிறது.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் இதற்கான முயற்சி மேற்கொண்டிருந்தார்.

---

ஈ. அருளானந்தம் (சுயேச்சை) கலட்டி றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, வதிரி திரு இருதயக்கல்லூரி ஆகியவற்றின் பழையமாணவர். 28 வயதுள்ள இளைஞரான திரு. அருளானந்தம் சென் தோமஸ் சனசமூக நிலையத் தலைவராகவும் சிறந்த சமூக சேவையாளராகவும் விளங்கி வருகின்ருர்.

---

### ஜனுப் பஸீர் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பாம்புக்கடி வைத்தியர் திரு. க. சிற்றம்பலத்தை கொழும்புத் திட்டத்தின் கீழ் உபகாரச் சம்பளத்தில் வெளிநாடு சென்று இந்த வைத்திய துறையில் பயில முன்பு மாநகரசபையால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை உடனடியாக அமுல்செய்யும் படி ஜனுப் எம். ஜி. பஸீரால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஜனுப் பஸீர் இத்தீர்மானத்தையொட்டிப் பேசுகையில் சாதி சமய வேறுபாடின்றி யாழ்ப்பாண மக்களுக்கு சேவை புரிந்துவரும் திரு. சிற்றம்பலம் மேல் நாடுகள் சென்று பாம்புகடி வைத்தியத்துறையில் விரிவாக ஆராய்ச்சி செய்வது இலங்கை வாழ் மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்றும் இது விஷயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்கும்படி மேயரைக்கேட்டுக்கொண்டார்.

இதை திரு. கே. வி. தெய்வேந்திரம் ஆமோதித்து ஆதரித்து பேசினர்.

சென்ற 24-ம் திகதிநடைபெற்ற யாழ். மாநகர சபைக் கூட்டத்திலேயே ஜனுப்பசீர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

---

### வெங்காய விலை கூட்டக்கோரிக்கை

வரணி, வியாழன்

வடமாகாணத்தின் முக்கிய உற்பத்திப் பொருட்களில் ஒன்ருன வெங்காயத்தின் விலையைக் கூட்டவேண்டுமென்றும் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்றும் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினத்தை தமிழரசு வாலிப முன்னணியின் வடவரணிக்கிளை கோரியுள்ளது.

---

### வள்ளி திருமணத் திருவிழா

வல்வெட்டித்துறை, வியா.

தொண்டமானறு செல்வச் சந்நிதி கோவில் வள்ளி திரு...

---

ஆங்கில மொழிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...தாரும் இதில் சம்பந்தப் பட்டவர்கள் மீது கருந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு. நிக்ஸன் கூறினார்.

...மன்றத்தின் விசாரணைக்கு படுத்தப்பட்டிருக்கிறார்

அமெரிக்க செனட் முப் படைக்குழுவொன்றும் இது பற்றி இரகசிய விசாரணை ஆரம்பித்திருக்கின்றது.

# லஞ்சம் கொடுக்க எத்தனித்தவழக்கு

## நெடுஞ்செழியன் சாட்சியம்

சென்னை, நவ. 27

''கடந்த 8-ம் மாதம் 25-ந் திகதி சட்டமன்றக் கூட்டம் முடிந்ததும் வீட்டுக்குச் சென்று ஓய்வெடுத்துக்கொண்டிருந்தேன் என்னைப் பார்ப்பதற்கு ஆடலரசன் என்பவர் வந்திருப்பதாக எனது பாதுகாப்பு அதிகாரி கூறியதும் அவரை என்னிடம் அனுப்பும்படி கூறினேன். ஆடலரசன் தன்னுடன் இன்னெருவரையும் கூட்டிக்கொண்டு வந்து இவர் நாகராஜன் கோவையைச் சேர்ந்தவர் டாக்டராகப் பணியாற்றுகிறார்'' என்று எனக்கு அறிமுகப்படுத்தினார். பின்பு கிருஷ்ணசாமி என்பருக்கு மருத்துவக்கல்லூரியில் இடம் கேட்டு நீங்கள் சொன்னால் நடக்கும் என்றனர். நான் மருத்துவக் கல்லூரியில் இடம் இல்லை என்றேன். அப்பொழுது நாகராஜன் கையிலிருந்த கவர் ஒன்றை ஆடலரசன் வாங்கி இதில் 5000 இருக்கிறது. எப்படியாவது இந்தக் காரியத்தை செய்ய வேண்டும் என்றார்.

சென்னையைச் சேர்ந்த ஆடலரசன், கோவையைச் சேர்ந்த நாகராஜன் ஆகிய இருவரும் மருத்துவக் கல்லூரியில் ஒருவருக்கு இடம் கேட்டு அமைச்சர் நெடுஞ்செழியனுக்கு லஞ்சம் கொடுத்ததாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் சாட்சியமளிக்கையில் தமிழ்நாடு கல்வி மந்திரி திரு. நெடுஞ்செழியன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில், ''நான் எனது உதவியாளரை அழைத்து மருத்துவக்கல்லூரியில் இடம் கேட்டு இருவர் லஞ்சம் கொடுக்க வந்திருக்கிறார்கள். அவர்களை கைது செய்யவேண்டுமென பொலிசுக்கு அறிவிக்கச் சொன்னேன். அப்போது ''மன்னித்துக்கொள்ளுங்கள். தெரியாமல் செய்துவிட்டோம்'' என்று ஆடலரசன் என் காலில் விழுந்தார். நான் மன்னிக்க முடியாது என்றேன் பின்பு பொலிஸ் சுப்பிரின்டன் வந்து அவர்களை கைது செய்தார்'' என்று கூறினார்.

## செய்தித் துணுக்கு

### புதுடில்லி நவம்பர் 27

### கற்பனை உலகில்

'சின்டிக்கேட் தலைவர்கள் உண்மையான உலகத்தைப் பார்க்காமல் கற்பனை உலகத்தில் இருக்கிறார்கள்' என்று சி. சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

0 0 0

### சின்னம் யாருக்கு

காங்கிரஸ் கட்சிச் சின்னம் யாருக்கு என்பது பற்றிய வழக்கு விசாரணை புதுடில்லி கோர்ட்டில் நடைபெறும்.

0 0 0

### நான் கடமைப்பட்டவனல்ல

''நான் காமராஜருடன் நீண்ட காலமாக தொடர்பு வைத்திருந்தாலும் நான் அவருக்குக் கடமைப்பட்டவனல்ல' என்று திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறினார்.

0 0 0

### முட்டுக்கட்டை போட்டால் மாற்றம்

'முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைபோடும் அதிகாரிகள் யாராக இருந்தாலும் அவர்களை உடனடியாக மாற்றவேண்டும்' என இளம் காங்கிரஸ் தலைவர் திரு. சந்திரசேகர் கூறினார்.

0 0 0

### உறுதிகூற முடியாது

'எக்காரணத்தை முன்னிட்டும் உருக்கின் விலை ஏற்றப்படமாட்டாது என உறுதி கூறமுடியாதென்று யூனியன் துணைமந்திரி திரு. கே சி. பந்த் கூறியுள்ளார்.

0 0 0

### இந்திரா வற்புறுத்து:

இயற்கை வசதிகளை காக்கவும், பயன்படுத்தவும் நல்ல முறையைவகுக்குமாறு சர்வதேச நிபுணர்களை பிரதமர் இந்திரா வற்புறுத்தினார்.

0 0 0

### பேசசுவார்த்தை

எல்லைக்காந்திகான் அப்துல் கபார்கானும் வெளிநாட்டு விவசார மந்திரி தினேஷ்சிங்கும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்

## ஆங்கில மொழிக்கு முக்கிய இடம்

லண்டன், நவ. 27

உலகின் அதிமுக்கிய மொழியாக ஆங்கிலமே பயன்பட்டுவருகின்றது. பிரிட்டனில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வின்மூலம் இந்தத்தகவல் பெறப்படுகின்றது. பலநாடுகள் இன்னமும் ஆங்கிலத்தையே பயன்படுத்தி வருகின்றன. பிரிட்டனிலிருந்து ஜப்பான்வரை வாணிபத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் அனேகமாக ஆங்கில மொழியையே பயன்படுத்துகிறார்கள். சோவியத் யூனியனும், சீனாவும் ஒன்றையொன்று எதிர்த்து நடத்தும் பிரசாரத்துக்குகூட ஆங்கிலமொழியே அதிக பயன்படுத்தப் படுகின்றதாம்.

## தமிழ்நாடு திரட்டியது ரூபா 10 கோடி

சென்னை, நவ. 26

அதிர்ஷ்ட லாபச் சீட்டு மூலம் தமிழ்நாடு அரசாங்கம் இதுவரை 10 கோடி 8 லட்சம் ரூபாவரை சேர்த்துள்ளதாகவும் பாரதத்திலுள்ள ராஜ்யங்களில் இது விஷயத்தில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது அடுத்துவருவது மகராஷ்டிர ராஜ்யம்.

## கொழும்பில் சந்திரப்பாறை

கோட்டை, வியாழன்

அப்பல்லோ-11 விண்வெளி வீரர்களான நீல் ஆம்ஸ் ரோங்கும் எட்வின் ஆல்ட்ரினும் சந்திரமண்டலத்திலிருந்து சேகரித்துக் கொண்டு வந்த சந்திரப் பாறைகள் அடுத்தமாதம் முதல் கொழும்பில் பார்வைக்கு வைக்கப்படவுள்ளது.

## முடிவுக்குவர முடியுமா

'விதிவிலக்காகக் காணப்படும் ஒரு சில சம்பவங்களை வைத்துக்கொண்டு இந்திய முஸ்லிம்கள் அத்தனை பேரைப்பற்றியும், ஒரு முடிவுக்கு வந்துவிட முடியுமா' என திரு. சவான் கேட்டுள்ளார்.

...றப்பட்டது.

ஊர்காவற்றுறை கழகக் காரியாலயத்தில் கழகத்தலைவர் வழக்கறிஞர் திரு. ப. கதிரவேலு தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது

## ''பெண்குலத்தை பேணவேண்டும்'

யாழ்ப்பாணம், வியாழன்

''கிருகலட்சுமி, மனைவி, இல்லாள், கிருகசாரிணி என்னும் பதங்கள் பெண்களின் முக்கியத்துவத்தைக் காட்டுவன பெண்கள் எப்பொழுதும் மற்றவர்களைப்பேணியே தியாகவாழ்வு வாழ்கின்றனர். பேணும்போது பெற்ற பெண்குலத்தை மதியாத நாடு தலையெடுக்க முடியாது. இத்தகைய மாதர்கள் சங்க மூலமாக இயங்கினால் இலகுவில் எந்நாட்டையும் பொன்னாடாக்க முடியும்''

இவ்வாறு திருநெல்வேலி கிழக்கு மாதர் முன்னேற்றச் சங்கத்தின் 12-வது ஆண்டு விழா சங்கமண்டபத்தில் கொண்டாடப் பட்டபோது, விசேஷ பேச்சாளராகக் கலந்துகொண்ட குமரபுர வித்தியால அதிபர் திரு. ஆர். சுப்பிரமணியம் கூறினார்.

கிராமமுன்னேற்ற அதிகாரி திரு. சி. நடேசன் தலைமையில் விழாநடைபெற்றது.

நியாய துரந்தரர் திரு. எஸ். கனகரத்தினம், செல்வி க, சின்னத்துரை, செல்வி தி. ரூபராணி, திரு. அ. கார்த்திகேசு உட்படப் பலர் பேசினர்.

மாணவ மாணவியரின் இசை நிகழ்ச்சிகளும் குழுப் பாட்டுகளும் இடம் பெற்றன. புதிய உறுப்பினர் தெரிவும் நடைபெற்றது. திருமதி ம. பரமேசுவரன் நன்றி கூறினார்.

(காரை. நி.)

## 117 வருடம் வாழ்ந்தார்

செம்பியன்பற்று, வியா.

செம்பியன்பற்று 17-ம்கட்டையைச்சேர்ந்த மூதாட்டி ஒருவர் 117வருடங்கள்வாழ்ந்துள்ளார். நாகி என்றழைக்கப்படும் திருமதி கட்டப்பிள்ளை என்பவரேபிரஸ்தாப மூதாட்டியாவர். இவர் கடந்த வாரம் காலமானார்.

## வடமராட்சிப் பிரதிநிதிகள்

உடுப்பிட்டி, வியாழன்

வடமராட்சியிலுள்ள ஐக்கிய நாணய சங்கங்களினால் திரு. வ. இராஜதுரை, திரு. ஆர் தர்மரத்தினம் (உடுப்பிட்டி கி. ச. தலைவர்) ஆகிய இருவரும் யாழ். மாவட்ட ஐக்கிய நாணயசங்கத்திற்கு வடமராட்சிப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

என். நடராசா (தமிழ்க் காங்கிரஸ்) திரு. நடராசா பருத்தித்துறை நகரசபையின் தற்போதைய தலைவராவார். புரக்டராகத் தொழில் நடத்திவரும் இவர் 1947ம்ஆண்டிலிருந்து பருத்தித்துறைப் பட்டினசபை ஆரம்பம் முதல் இன்றுவரையிலும் அங்கத்தவராக இருக்கிறார். 1948ம் ஆண்டிலிருந்து 1954ம் ஆண்டு வரை பட்டினசபையின் தலைவராகவும் 1957ம் ஆண்டிலிருந்து இதுவரை பருத்தித்துறை நகரசபைத் தலைவராகவும் பணிபுரிந்து வருகிறார்.

பருத்தித்துறை பஸ்நிலையப் பிரச்சினையை வைத்துச் சிலர் தனக்கு எதிராகப் பிரசாரம் செய்வதாகவும், பருத்தித்துறை பஸ்நிலையம் ஒருபோதும் இடம்பெயராதென்றும், இப்படியான பொய்ப் பிரசாரங்களில் தனது வட்டார மக்கள் ஏமாறக்கூடாதென்றும் வற்புறுத்திய திரு. நடராசா தனது அபிவிருத்தித் திட்டங்களை விபரிக்கிறார்.

''வாகன குடிநீர்விநியோக கஷ்டத்தை தீர்த்துவைக்குமுகமாக மந்திகையிலிருந்து குழாய் மூலம் நீர் விநியோகம் செய்ய நடவடிக்கைகள் எடுத்துள்ளேன். கட்டுப்பாட்டு வரவு-செலவுத் திட்டத்தை நீக்குவதானால் மக்கள் தமது வரிப்பணத்தைச் செலுத்தி ஒத்துழைக்க வேண்டும். இல்லாவிடில் அபிவிருத்தி வேலைகள் செய்வதில் அனுமதி பெறுவது கஷ்டமானதாக இருக்கும். மின்சார அபிவிருத்தித் திட்டத்திற்கென 1,40,000 ரூபா கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. புதிய பகுதிகளுக்கு மின்சார விநியோகம் வழங்கவிருக்கிறேன்.

### வி. இரத்தினசிங்கம்

(சுயேச்சை)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் லிகிதராகப் பணி புரியும் இவ்விளைஞர் தேர்தலில் முதல் தடவையாகக் குதித்துள்ளார். இவருக்கு வயது 30.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லி, வதிரி திரு இருதயக்கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர். பருத்தித்துறை யுனைட்டெட் விளையாட்டுக்கழகத்தை ஸ்தாபித்துவைத்தவர் விளையாட்டுத்துறையில் முன்னணி வகிக்கும் இவர் சமூகத் பணியில் பெரிதும் ஈடுபாடு கொண்டு உழைப்பவர்.

தற்போதைய நகரசபை நிர்வாகத்தை மாற்றியமைக்கத் தாம் முயலுவதாகவும், சந்தைத் திருத்தம், புதிய சந்தை, பஸ்நிலையம் அமைத்தல், வீதிகள் திருத்தம் உட்படச் சகல குறைபாடு ... போக்குவதற்கு இவர் கூறுகிறார்.

### 4ம் வட்டாரம் (தெனி)

பி. ஆறுமுகம் (சுயேச்சை) பருத்தித்துறை நகரசபையின் தற்போதைய அங்கத்தவர். நகரசபையாவதற்கு முன்பு 6 வருடகாலம் அங்கத்தவராகவும், நகரசபையானதின் பின்பு 7 வருடகாலமாகத் தொடர்ந்து உறுப்பினராவும்க விளங்கி வருகிறார்.

புலோலி வேலாயுதம் ஆண்கள் ஆங்கில பாடசாலையின் பழைய மாணவர். 23 வருட காலம் டிஸ்பென்ஸராகப் பணிபுரிந்தவர்.

''என்னால் வட்டாரத்திற்குச் செய்யக்கூடிய உதவிகளைச் செய்துகொடுப்பேன். மாடு அறுக்கும் இடத்தை திருத்தியமைப்பேன். நவீன சந்தை, பஸ்நிலையம் ஆகியன எனது பணிகளாகும்'' —இப்படி அவர் தெரிவித்தார். இவருககு வயது 65.

எஸ். விவேகானந்தராசா (சுயேச்சை) வேந்தன் என எல்லோராலும் அழைக்கப்படும் இவர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர். வயது 37. வர்த்தகத் துறையில் தனது கவனத்தைச் செலுத்திவருவதோடு சமூகப் பணியிலும் ஈடுபட்டுள்ளார்.

தேர்தல் களத்தில் ஆரம்பப் படியில் கால்வைத்திருக்கும் இவர் பொதுவாக வட்டாரத்தின் முழுத் தேவைகளையும் நிறைவேற்றிக் கொடுப்பாராம்.

### 5-ம் வட்டாரம்

(பிள்ளையார் வட்டாரம்)

வின்சென்ற் டீ போல் (சுயேச்சை) வதிரி திருஇருதயக் கல்லூரி. யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர். தேர்தலில் போட்டி இடுவது இதுவே முதல் தடவை.

உதைபந்தாட்டத்தில் சிறந்த வீரரான இவர் அடக்கமாகவும் அமைதியாகவும் இருந்து சமூகப் பணிபுரிந்து வருபவராவார். பிரபல வர்த்தகரான இவர் தனது வட்டார ஒழுங்கைகளுக்கு மின்சாரம் இல்லையென்றும் மின்சாரம் இல்லாத பகுதிகளுக்கு மின்சாரம் பெற்றுக் கொடுப்பேன் என்றும், வீதிகளைச் சீர்திருத்துவேன் என்றும் கூறினார்.

நவீன சந்தை அமைப்பதற்கும், வட்டார விஸ்தரிப்பிற்கும் ஆதரவுகொடுக்கப்போவதாகவும் வரவு செலவுக்கட்டுப்பாட்டைநீக்கிக் கடனெடுத்துத்தண்ணீர் திட்டம் முதலியவற்றைப் பெற முயற்சி செய்வதென்றும் பொதுமலசலகூடம் அவசியம் நிறுவிக்கொடுப்பேன் என்றும் தனது வட்டார மக்களுக்குத் தெரிவித்துள்ளார். வயது 32

வதிரி திரு இருதயக்கல்லூரி ஆகியவற்றின் பழையமாணவர். 28 வயதுள்ள இளைஞரான திரு. அருளானந்தம் சென் தோமஸ் சனசமூக நிலையத் தலைவராகவும் சிறந்த சமூக சேவையாளராகவும் விளங்கி வருகின்றார்.

கிரிக்கெட், உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபாடுகொண்டவர். நிர்வாக ஊழல்களை அகற்றி நல்ல நிர்வாகம் ஏற்படவழி வகுப்பேன் என்று கூறும் இவரது திட்டங்கள்:-

வட்டார அதிகரிப்பை எதிர்ப்பது, தேவையான இடத்தில் மின்சார வசதி, பொதுசனமலசலகூடம் நிறுவுவது, நகரசபையால் செய்யக்கூடிய அளவு சேவை செய்வதுடன் சிரமதான மூலம் வேலைகளைச் செய்ய முயற்சிப்பது

நகரசபைத் தேர்தலில் அரசியல் கலக்கக்கூடாது என்பது தனது விருப்பம் எனக் கூறிக்கொள்ளுகிறார்.

### 6-ம் வட்டாரம்

(நெல்லண்டை

வி. கமலநாதன் (சுயேச்சை) முதல் தடவையாக நகரசபைத் தேர்தல்களத்தில் காலடி எடுத்துவைத்திருக்கும் திரு. கமலநாதன் நகரசபைத் தேர்தலில் போட்டியிடுபவர்களில் வயதில் குறைந்தவர். புலோலி வேலாயுதம் ஆங்கிலப் பாடசாலையின் பழைய மாணவரான இவர் வியாபாரத் துறையில் ஈடுபட்டுள்ளார்.

வாலிப முன்னணிக்காரியதரிசியாக இருந்து சமூக சேவையில் துடிப்புடன் முன்னின்று உழைப்பவர். இவரை எதிர்த்து இவரது உறவினரான தற்போதைய அங்கத்தவர் போட்டியிடுகின்றார்

சலவைத் தொழிலாளர்கட்கு வசதி செய்யும்முகமாகக் குளம் வெட்டிக் கொடுப்பேன். அரைகுறையில் விடப்பட்டுள்ள வீதிகளைப் பூரணப்படுத்துவேன். வீதிகள் அசுத்தப் படுத்தப்படாது இருப்பதற்கு வீதிகளின் சந்திகளில் குப்பைத்தொட்டிகளை நிறுவுவிப்பேன். வட்டார ரீதியில் முன்னேற்றங்களைச் செய்வதற்குச் சிரமதான மூலம் முயற்சிசெய்வேன்' இப்படி அவர் கூறினார்

0 0

எஸ். சிவசுந்தரம் (சுயேச்சை) பருத்தித்துறை சித்திவிநாயகர் பாடசாலை, வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி ஆகியவற்றின் பழையமாணவர், தற்போதைய அங்கத்தவரானஇவருக்கு வயது42.

நெல்லண்டை நெசவு நிலையக் காரியதரிசியாகவும், நெல்லண்டை அம்பாள் கோவில் தர்மகர்த்தாசபை உறுப்பினராகவும் பணிபுரியும் இவர் தமிழ்க்காங்கிரஸ் ஆதரவாளருமாவர்.

வீதிதிருத்துதல், சலவைத் தொழிலாளிகளுக்குக் குளம் கட்டிக்கொடுத்தல், மின்சார அபிவிருத்தித்திட்டம் ஆகியன இவரது நோக்கங்களாகும்.

எஸ். சிவலிங்கம் (சுயேச்சை): நகரசபைத் தேர்தலில் முதற்தடவையாகக் குதித்துள்ள இவர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, வதிரி திரு. இருதயக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். வயது 32:

கைத்தொழில் துறையில் தனது கவனத்தைச் செலுத்தி அதையே தொழிலாகக் கொண்டுள்ள இவர் பிறருக்கு முன்மாதிரியாக விளங்குகின்றார். சமூகமுன்னேற்றச் சங்கங்களிலும், சமூகசேவைகளிலும் ஈடுபட்டு உழைத்து வருபவர்.

சிறுபான்மைச் சமூகமக்களின் குறைபாடுகளைப் போக்கப்பாடுபடுவதும், அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதும், மோசமான நிலையில் இருக்கும் வீதிகள், மின்சார விநியோகம் ஆகியனவற்றைப் புனருத்தாரணம் செய்வதும் இவரது திட்டமாகும்.

முக்கியமாகச் சலவைத் தொழிலாளிகளுக்கும் குளம் கட்டிக் கொடுக்க முயற்சி செய்வாராம்.

(தொடரும்)

## வள்ளி திருமணத் திருவிழா

வல்வெட்டித்துறை, வியா.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில் வள்ளி திருமணத்திருவிழா இம்மாதம் 30 ந்திகதிஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது.

பகல் அபிஷேகமும் இரவு விசேஷபூசையுடன் திருவிழாவும் நடைபெறும். ஆலய ஆதின கர்த்தா திரு. செ. பொன்னுத்துரை ஐயரால் நடத்திவைக்கப்படும் இவ்வைபவத்தின் போது பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை ஐயரால் பாடப்பட்ட ஸ்ரீ வேலர்' திரு ஊஞ்சல்' என்னும் நூல் அரங்கேற்றப்படவிருக்கிறது.

## கி வா. ஜாவை அழைக்கமுடிவு

சுழிபுரம், வியாழன்

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவத்தின் போது தொடர்ந்து பத்து தினங்களும் முருகன் அருள் உரைகள் நிகழ்த்த திரு. கி. வா. ஜெகநாதனை, அழைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கோவில் அர்ச்சகர் எஸ். வைத்தீஸ்வரா இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உள்ளத்திற்குக் கல்வி அளிப்பது பற்றி ஒரே ஒரு வார்த்தை. புத்தகங்களின் மூலம் இதைச்செய்ய முடியும் என்று நான் நம்பவில்லை. ஆசிரியருடன் வைத்துக்கொள்ளும் உயிர்த்துடிப்புள்ள தொடர்பின் மூலம்தான் இது முடியும். ... மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் கார்த்திகை மாதம் 13-ந் திகதி (28-11-69)


## நமது "கற்பக மரம்"

நமது "கற்பக விருட்சம்" எனப்படும் பனை மரத்தைப் பற்றி மீண்டும் எழுத விரும்புகிறோம். சென்ற பல நூற்றாண்டுகளாக வட பகுதிமக்களின் பெரும் இயற்கைச் செல்வமாக இம் மரங்கள் இருந்து, பல வகைகளிலும் நம்மவர்களுக்கு இது பயன்பட்டு வருகின்றன. இம் மரத்தை தென்இலங்கையிலும் வெகுவாகப் பயிரிட முயற்சிகள் நடப்பதால் இது பற்றிய முக்கியத்துவம் அதிகரித்து, நமது கவனத்தை ஈர்த்திருக்கின்றது. இலங்கையின் மற்றப் பகுதிகளிலும் பனையைப் பயிரிடத் தீர்மானித்ததற்காக இலங்கை அரசாங்கத்தைப் பாராட்டவேண்டும். நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அரசாங்கத்தின் இந்த உத்தேசம் நிறைவேற்றப்படுமென்றும் இலங்கைப் பொதுமக்களின் பொருளாதாரத்திலே பனை ஒரு முக்கிய இடம்பெறுமென்றும் நம்புகிறோம்.

பனையின் உபயோகங்களைப் பற்றி ஈழத்து தமிழ் மக்களுக்கு எடுத்துவிளக்குவது தேவையற்ற ஒரு காரியமாகும். ஏனெனில் அவர்கள் இதன் பயன்களை உணர்ந்தே, இதில் அக்கறைகொண்டு, பாதுகாத்து வருகின்றார்கள். கோப்பாய் காரியாதிகாரியாகிய திரு வி. கந்தப்பிள்ளை, ஒரு பள்ளிக்கூட பரிசளிப்புவிழாவில் பேசுகையில் பனையைப்பற்றி குறிப்பிட்டிருந்ததைப் படித்ததும் இதுபற்றிய எண்ணங்கள் நமக்கு மீண்டும் ஏற்படுவதாகவுள்ளன. திரு. பிள்ளையவர்கள் அனுபவமிக்க மூத்த காரியாதிகாரி. நாட்டின் நிலைமையையும் சிறப்பாகத் தமிழ் பேசும்பகுதிகளிலுள்ள மக்களின் விவசாயம் முதலிய பல தேவைகளையும் நன்கறிவார். அவரும் நாட்டின் நன்மையிலே அக்கறையுள்ள பலரும் பனை அபிவிருத்தி விஷயமாகக் ... தீவுப்பகுதிகளையும் உள்ளிட்டு வேலையைத் துவக்கலாம் இந்த இயக்கத்துக்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தமது கச்சேரி மூலம் கூடிய உதவிகளை அளிக்க வேண்டும் பல பகுதிகளிலுமுள்ள காரியாதிகாரிகள், இவ்விஷயத்தில் தக்க பங்கு பற்றமுடியும். பனைமரங்களை நாட்டு, அவற்றிலிருந்து கூடிய பயனைப்பெறக்கூடிய இத் தேசியத் திட்டத்தில் கல்வி ஸ்தாபனங்கள் மாணவமாணவிகளை ஈடுபடுத்தி, அவர்களுக்கு உற்சாகமூட்ட எவ்வளவோ செய்யக்கூடும். இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவது, தமிழ்ப் பொதுமக்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக இருக்கும்.

இம்மரத்தின் ஒவ்வொரு பகுதியும் நமக்கு எவ்வளவோ பயன்தரக் காத்திருக்கின்றது நமது உணவுக்கும், குடியிருப்புக்கும் நம் கால்நடைகளின் உணவுக்கும் இம் மரத்தால் பல உபயோகங்களுண்டு. இத்துடன் பனைவெல்லம். பனம்கற்கண்டு, சீனி முதலியவற்றையும் இதிலிருந்து தயாரிப்பதாயின் நாம் இவற்றை இறக்குமதி செய்வதைவிட்டு வெளிநாடுகளுக்கும்கூட ஏற்றுமதிசெய்து, அந்நியச்செலாவணிச் செல்வத்தையும் பலப்படுத்தக் கூடும். பனங்கற்கண்டு, உணவுக்கும் மருந்துக்கும் பயன் படுமாதலால், அவற்றை இங்கேயே குடிசைத்தொழிலாக உற்பத்திசெய்ய யாழ்ப்பாணமக்கள் முன்வரவேண்டும். இவ்விஷயம் மிக முக்கியமானதால் இதற்காக ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அதன்மூலம் வேலை செய்யலாம்.

மேலும் பனைமரங்கள் அதிகரிப்பின் இப்பகுதிகளில் மழையும் அதிகமாகப் பொழியக்கூடும். மழையை அதிகரிக்க அதிக மரங்களைப் பயிரிடவேண்டுமென்று விஞ்ஞானிகளும் கூறுவர். இதனால் இப்பகுதியின் சீதோ...

# மறைந்துபோன அருட்பா-மருட்பா விவாதத்துக்கு புத்துயிர் ஏன்?

நாவலர் பெருமான் 90-ம் குருபூசை டிசம்பர் மாதம் முதல் திகதி சிதம்பரத்தில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. இவ்விழாவையொட்டி நாவலர் உயர்நிலைப் பள்ளி நற்பொறுப்பாளர் திரு. தி. க. இராசேசுவரன் விடுத்துள்ள அறிக்கையில் அருட்பா மருட்பா வழக்குப் பற்றி தமிழ் நாடு முதல் அமைச்சர் சமீபத்தில் குறிப்பிட்டதை மறுத்து விளக்கம் தெரிவித்துள்ளார்.

**— தி. க. இராசேசுவரன் —**
(நாவலர் உயர் நிலைப்பள்ளி நற்பொறுப்பாளர்)

சென்னையில் 27-9-69ல் நடந்த முப்பெரும் விழாவைத் திறந்து வைந்த தமிழ் நாட்டின் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் வள்ளலாரின் பாடல்களை நாவலர் பெருமான் மருட்பா என்றார் என்றும் அருட்பா மருட்பா விவாதம் வள்ளலார் காலத்திலேயே நீதிமன்றம் வரை சென்றது என்றும் நீதிபதி வள்ளலாரின் பாடல்கள் அருட்பா தான் கூறி வாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார் என்றும் கூறியுள்ளார். நீதிமன்றத்துக்கு வள்ளலார் வந்தபோது குற்றம் சாட்டியவர் எழுந்து நின்றதனால் அவ்வாறு தீர்ப்பு அளிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். என்ன குற்றச்சாட்டு என்பதும் விளக்கப்படவில்லை. நீதிபதி வழக்கை விசாரிக்காமல் முடிவு செய்தார் என்பதும் முரண்பாடு உடையதாகும். இப்பொய்யான கதை 1961-ம் ஆண்டு வார வெளியீடு (குமுதம்) ஒன்றில் காணப்பட்டமையால் அதை நான் மறுத்து 82 ம் குருபூசை விழா வரவேற்புரையில் எழுதி அவ்வார வெளியீட்டிற்கும் தெரிவித்தேன். நாவலர் வள்ளலார் பெருமக்கள் இருவருக்கும் இடையில் அருட்பா மறுப்பு வழக்கு நடக்கவில்லை; அவ்வழக்கு 1904-ம் ஆண்டு சென்னை பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் 24533 காலண்டர் நம்பர் படி வடிவேற்பிள்ளை என்பவரால் பரசமய கோளரி என விருது பெற்ற நா. கதிரவேற்பிள்ளை, சு பால சுந்தர நாயக்கர் என்பவர்கள்மீது தொடுக்கப்பட்டது வழக்கு விளங்கப்பட்டுத் தள்ளப்பட்டது. 1905-ம் ஆண்டு ஹைகோர்ட்டு காலண்டர் 143 படி ஆப்பீல் மனு தாக்கல்செய்யப் பட்டது. அதை விளங்கிய ஜடிஸ் மூர்துரை, ஜஸ்டிஸ் பென்சன்துரை அவர்கள் அப்பீலைத் தள்ளிவிட்டார்கள் என்று மிகச் சுருக்கமாகக் கூறியுள்ளேன்.

உண்மை நிகழ்ச்சி இவ்வாறாகப் பூரியர் டகலும் புன்மொழிகளைக் கேட்டு ஆராயாமல் அவர் தம் ஆதாரம் அற்ற கூற்றை ஏற்று பரப்பியதற்கு மனம் வருந்துகிறேன். அருட்பா மருட்பா விவாத வழக்கு பற்றி விவரமாகக் கூறப்பட்டுள்ளது. அவ்வரவாற்று நூலில் காணப்படுவதைச் சுருக்கிக் கூறுதல் இன்றியமையாததாகும். சைவ சித்தாந்த சண்டமாருதம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரால் தாபிக்கப்பட்ட சென்னை சிந்தாதிரிபேட்டை வேதாகமோக்த சைவ சித்தாந்த சபையார் வேண்டுகோளின் பேரில்நா கதிரைவேற்பிள்ளை அவர்கள "அருட்பா என்பது திருமுறையே" என்றும் "மருட்பா என்பது முக்குண வயத்தால் முறை மறந்து அறையும் இக்காலப் பிலவர் பாக்களே" என்றும் இராமலிங்கம்பிள்ளை அருட்புரகாச வள்ளல் ஆகார் என்றும் அவர் பாக்கள் அருட்பா ஆகாது என்றும் ஆரண ஆகம அநிள் நூல்களையும் மற்றைய தெய்வீக சாத்திரங்களையும் காட்டிச் சாதித்தனர். தெய்வத் திருவாளர்கள் திருவாய்மலர்ந்தருளிய திருமுறைகளே திருவருட்பா வென்றும் மற்றையோர் பாக்கள மருட்பாவென்றும் பெருஞ்சங்கங்களில் சென்று அரசாங்கம் புலவர் செய்த உபந்நியாச சாரங்களைப் பின்வருவார்க்கு உபகரிப்பான் உன்னி வேதாகமோக்த சபையார்கள அவயிற்றைத் திரட்டி அச்சுவிமானம் ஏற்றிப் புத்தகம்ஆக்கி அதற்கு இராமலிங்கபிளளை பாடல் ஆபாசர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு என்னும் எழில் நாமமீந்து பிரசுரித்தனர். மருட்பா மறுப்பில் 27 இருபத்தேழு விடயங்கள பொய்யாக வரையப்பட்டுளளன என்று 1904 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சென்னை டவுன் பொலிஸ்கோர்ட்டில் இராமலிங்கப்பிளளை தமயன் தனயராயவடிவேற்பிளளை அவர்களால் வழக்குத் தெடரப்பட்டது குற்றம்கூறப்பட்ட 27 விடயங்களுள இராமலிங்கர் பாக்களில் வெளளிடைமலைபோல் விளங்குவது காடடப்பட்டது, எஞ்சிய ஏழும் போலி அருடபா மறுப்பு குதர்க்க ஆரணிய நாசமகா பரசு கண்டனம் இராமலிங்கம் படிற்றொழுக்கம், முக்குண வயதான் முறை மறந்து அறைதல் தத்துவபோதினி. தத்துவ விவேசினி, துத்துவவிசாரணி, தினவர்த்தமானி, சுகிர்தவசனி. ஞானபானு நேட்டிங் பப்ளிக ஒபினியன் அற்புதப் பத்திரிகை வர்த்தமான விமர்சனி திராவிடப் பிரகாசிகை பாவலர் சரித்திர தீபம் முதலிய புத்தகங்களையும் பத்திரிகைகளையும் விளம்பரங்களையும் கொண்டு வடலூர் மேட்டுக்குப்பத்திற்குச் சென்று இராமலிங்கர் செய்கைகளை நேரில் கண்ட சிரியர்களைக் கொண்டும் நிரூபிசகப்பட்டன. அவ்வழக்கைச் சுமார் ஆறுமாத காலம் விசாரித்த நீதிபதி கனம் அஜீஜுடின் சாயுபு பஹதூர் அவர்கள 1904 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் தேதி தளளி விடடனர். அந்நூலில் மேய்கோர்டடில் அப்பீல் தளளப் படட தகவலும் தரப்படடுளளது விரிவஞ்சி இவண் சேர்க்கப்படவில்லை.

### துவேசம்பாராட்டவில்லை

அருட்பா-மருட்பா விவாதம். வழக்குப் பற்றி விசாரிக்குங்கால் வள்ளலாரைக் குறைவுபடுத்தும் முறையில் கேள்விப்பட்ட செய்திகள் பல. ஆனால் அவற்றை எல்லாம் ஆய்ந்து உண்மையை அறியாமல் மற்றவர்களுக்கு எடுத்தியம்புதல் ஏற்ற செயலாகாது என்னும் கொள்கை பற்றி விளம்பரப்படுத்தாமல் விட்டுவிட்டேன் ஒன்றே ஒன்று மாத்திரம் எடுத்துக் காட்டாககுறிப்பிடல் பொருத்தமுடைத்து நாவலர்பெருமானுக்கும் வள்ளலாருக்கும் மஞ்சக் குப்பத்தில் நடந்த மானநஷ்ட வழக்கில் நாவலர்பெருமான் மட்டும் இருப்பதற்குப்பீடம் தரப்பட்டது என்று தமிழிலும் சித்தாந்தத்திலும் வல்லுநரானபெரியார் சபா சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள் தெரிவித்தார்கள். இந்நிகழ்ச்சியை நான்கேட்டுக்கொண்டவாறு எழுதித்தருவதற்கு முன்னர் அம்முது பேரறிஞர் இறைவனடி சேர்ந்துவிட்டார்கள்

வள்ளலாரின்மறைவுபற்றி நிலவும் கதைகள் பல. நாவலர் பெருமான் அதுபற்றி ஏதுஞ்சொல்லவில்லை; தமக்கு உடன்பாடில்லாததை எடுத்துரைத்தார்; ஆனால் துவேஷம் பாராட்டவில்லை என்பதுபோதரும். இதைக் கருதாதும் உண்மைக்கு மாறான துமானவற்றைச் சொல்லித் திரிவது வருந்தத் தக்கது.

பேரறிவு மிக்க நாவலர் பெருமான் அருட்பா எனப் பெயரிடுதலைத் தடுக்க நீதிமன்றத்திற்கு என்ன அதிகாரம் உண்டு என்று ஆலோசித்திருக்கமாட்டாரா? நடுநிலையைக் கடைப்பிடிக்க வேண்டிய நீதிபதிஒருவர் வழக்கை விளங்காமல் தம் அபிப்பிராயப்படி தீர்ப்புக் கொடுத்திருப்பாரா? இவற்றை எல்லாம் உன்னி உண்மையை நாடித் தெரிந்துகொள்வதே மகான்கள் இருவர் பாலும் பேரன்பும் பெருமதிப்பும் உடையோர் செயலாகும்,

சிலம்புச் செல்வர் ம பொ சிவஞானக்கிராமணியார் அருட்பா - மருட்பா வழக்கைப் பற்றி உண்மையறிய முயன்று செவி வழியாக வழங்கிவரும் தவறான கதைக்கு ஆதாரமில்லை என்பதனை நன்கு தெரிந்து வள்ளலாருக்கு எதிராக நாவலர் இருக்க நேர்ந்தது இறைவன் திருவிளையாடல்போலும் என்று தாம் எழுதி வெளியிட்டுள்ள 'வள்ளலாளர் கண்ட ஒருமைப்பாடு' என்னும் தலைப்புள்ள அரியதோர் நூலில் கூறியுள்ளார்

# ஜயாறன் எழுதுவது..

யாழ்ப்பாணத்தில் விளையும் காய்கறிகளின் விலைவாசிகள் மிகவும் உயர்ந்துவிட்டனவாம். வெங்காயம் றாத்தல் 75 சதம். கிழங்கு ஒரு ரூபாய். எந்தக் காய்கறியையும் றாத்தல் 55சதத்துக்குக் குறைத்து வாங்க முடியவில்லை என்றும் ஓரன்பர் வந்து புகார் கூறினார்.

சாதாரண பழங்களின் விலையைக் கேட்டால் அதை எளிய 'மக்கள் வாங்கிச் சாப்பிடமுடியாதபடி உள்ளன. இங்கு விளையும் காய்கறி, பழம் முதலியனவே இங்குள்ள பொதுமக்களுக்குத் தாராளமாகக் கிடைக்க முடியாது போவதாயின் என்ன செய்வது!

இறக்குமதியைத் தடுத்து, நம் நாட்டிலே உற்பத்தியைப் பெருக்கவே, சற்றுக் கூடுதலான விலை கொடுக்கவும் தியாகஞ்செய்யவும் பொதுமக்களைக் கேட்டனர். பொதுமக்களும் இதற்குத் தேசாபிமானத்துடன் முன்வந்தனர். ஆனால் சுயதேவைப் பூர்த்தி, செலாவணி மிச்சம் என்ற பெயரால் பொதுமக்களை அளவுக்கு மிஞ்சிக் கசக்கி, அதிலும் ஏழைகளைப் பட்டினிபோடுவது எவ்விதத்திலும் நியாயமாகுமா?

கமக்காரருக்கு இவ்வளவு லாபம் சேருவதில்லையென்றும், இடையில் உள்ளவர்களே அதிக லாபமடிப்பதாகவும் ஒருவர் கூறுகிறார். யார் லாபமடித்தாலும்சரி, பொதுமக்களின் முக்கிய உணவுப் பொருள் விஷயத்தில் அதிக லாபமடிப்பது பெரும் பாவம். இந்த நிலைமையைப் பொதுமக்கள் எவ்வளவு காலம் சகிக்க வேண்டும்? இதைப் பற்றி எம். பி.மார்களும், மாநகர சபை, பட்டினசபை, கிராம சபை முதலியனவும் கவனித்து எளிய மக்களின் சங்கடத்தைக் குறைக்க இனிச் சுணங்காமல் முன்வரவேண்டும். அது அவர்களது முக்கிய கடமையுமாகும். அவர்கள் கவனிக்காவிட்டால் யார்தான் இதைப் பற்றிக் கவனிப்பது?

0 0 0

மகாத்மா காந்தி எழுதியும், பேசியுமுள்ளவற்றை இந்திய அரசாங்கம் பல புத்தகங்களாக வெளியிட்டு வருகிறது. 1924ம் வருடத்திலே அவர் எழுதியுள்ள ஒரு பதில் கடிதத்தை நேற்றுப் படித்தேன். அரசியல் ... ளவு ஆழ்ந்து சிந்தித்துள்ளார் என்பது தெரியவந்தது

அதாவது திடீரென ஒருவருக்கு ஆபத்தேற்பட்டால் அவருக்கு உதவி செய்வதற்காகத் தனது தேக சுகத்தையும் பாராமல் இருக்கவேண்டுமென்று காந்திஜி எழுதியிருந்ததைப்படித்துவிட்டு ஒருவர், நம் தேகசுகத்தைக் கெடுத்துக் கொண்டால் அது தற்கொலைக்கு சமம்தானே என்று கேட்டிருந்தார்.

அப்படி இல்லை என்றும், கருணை உள்ளத்துடன், மற்றொருவருக்கு உதவி செய்யப்போவதால், அந்தக் கருணை உணர்ச்சியே நம் மனதையும், தேகசுகத்தையும் மேம்படுத்துமென்றும், அதனால் முடிவில் அதிக நன்மையே ஏற்படுமென்றும், அதனால் நம் தேகசுகத்துக்குத்தீங்கேற்படாதென்றும் பதில் எழுதியிருக்கிறார்

நமது நோய்களுக்கு அடிப்படைக் காரணம், நமது மனோ உணர்ச்சிகள்தாம் கோபம், பொறாமை, பேராசை, சுயநலம் முதலிய உணர்ச்சிகளை நாம் வளர்க்கும்போது, நமக்கு நாமே தீங்கு செய்து கொள்கிறோம். நமது இரத்தம் சூடேறிக் கெடுகிறது. நமது சுகம் கெடுகிறது இந்த உண்மை தெரிந்தவர்கள் பிறர்மீதுகோபமோ, பொறாமையோ கொள்ளுவார்களா?

ஆனால் மனிதர்களாகிய நமக்கு கோபம் வராமலிருக்க முடியாதுதான். ஆனால் அதனால் நமக்குநாமே தீங்கு செய்து கொள்ளுகிறோமென்பது நினைவு வந்ததும், உடனே அதை அடக்கி மனமாற்றமடையலாம்'இமைப் பொழுதும் எம்நெஞ்சில்' இறைவன் நீங்காதிருப்பின், மனம்எப்பொழுதும் நிதானமாக இருந்து தேகசுகம் முதலியன எல்லாம் மேலாக இருக்கும் தெய்வ நினைப்பால் இவ்வித பலனுண்டு என்று கண்டவர்களின் நம்பிக்கை அசைக்கமுடியாது உறுதிப்படுமல்லவா?

0 0

கூர்வித்தவா குற்ற நோய் வினை காட்டியும் கூர்வித்த நோய், ஊர்வித்தவாயுற்ற நோவினை தீர்ப்பான் உகந்தருளி, ஆர்வித்தவாநடியேனை ஐயாறனடிமைக்களே, சேர்வித்தவாதொண்டனேனைத்தன் பொன்னடிக் கீழெனயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் சிறப்பாகத் தமிழ் பேசும்பகுதிகளிலுள்ள மக்களின் விவசாயம் முதலிய பல தேவைகளையும் நன்கறிவார். அவரும் நாட்டின் நன்மையிலே அக்கறையுள்ள பலரும் பனை அபிவிருத்தி விஷயமாகக் கூறியுள்ள மதிப்புமிக்க யோசனைகளை பொதுமக்களும், அரசாங்கமும் கவனித்து, பாராட்டத்தக்க இக் காரியத்தில் ஒத்துழைப்பரென்றே நம்புகிறோம்.

கிராமசபைகள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விவசாய ஸ்தாபனங்கள் முதலியன பனைமரங்களை நட்டு பாதுகாப்பதற்கான இயக்கத்தை ஆரம்பித்து முதற்கண் யாழ்ப்பாணத்தில் மேலும் பனைமரங்களை அதிகரிப்பின் இப்பகுதிகளில் மழையும் அதிகமாகப் பொழியக்கூடும். மழையை அதிகரிக்க அதிக மரங்களைப் பயிரிடவேண்டுமென்று விஞ்ஞானிகளும் கூறுவர். இதனுல் இப்பகுதியின் சீதோஷ்ணநிலையும் மேம்பட்டு மக்களின் சுகாதாரவாழ்க்கைக்கும் கூட உதவியாக இருக்கலாம். யாழ்ப்பாண மாவட்ட காரியாதிகாரிகளும் எம் பி. மார்களும் செனட்டரும் கூடிப்பேசி, இந்த திட்டடதில் ஒத்துழைத்து தங்களது முக்கியமானதோர் சேவையாகக்கொண்டால், அவர்கள் நம் மக்களுக்கு நன்மைசெய்தவர்களாவர்.

## விளையாட்டுப் போட்டி

சென்னை மாநகராட்சி உறுப்பினர்களும் மாநகராட்சி உத்தியோகத்தர்களும் விளையாட்டுப் போட்டியொன்றில் கலந்துகொண்டதுடன் மாநகராட்சி உறுப்பினர் பலர் மாறுவேடப் போட்டியிலும் கலந்துகொண்டு பரிசுபெற்றிருக்கின்றனர் அரசியலில் வேறுபட்ட கொள்கைகளையும் கருத்துக்களையுமுடையவர்களும் வெவ்வேறு பதவிகளிலும் உத்தியோகத்திலுமுள்ளவர்களும் சகல பிரச்னைகளையும் சிறிது நேரமாவது மறந்து உயர்வு தாழ்வில்லாமல் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வது சமுதாயத்தில் சமத்துவத்தை நிலைநாட்டச் சிறந்த வழியாக அமையும்.

இங்கு நமதுநாட்டிலும் உள்ளூராட்சிமன்ற அங்கத்தவர்கள் மட்டுமல்ல பல்வேறு அரசியல் கட்சிகளுக்கிடையிலும் அரசாங்க அதிகாரிகள் உத்தியோகத்தர்களுக்கிடையிலும் ஆண்டுக்கொருதடவையாகுதல் இப்படியான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது சிறந்த பயன்தரலாம். அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகள், உத்தியோகத்தர்களும் தாங்கள் பொதுமக்களின் ஊழியர்கள் என்பதை உணர்த்தவும் உணர்ந்துகொள்ளவும், பொதுமக்களும் அரசியல் வாதிகளும் உத்தியோகத்தர்களும் தங்களைச் சார்ந்தவர்களே என்பதை உணர்ந்து சமுதாய சீரமைப்பில் ஒத்துழைப்பு அளிக்கவேண்டியதன் அவசியத்தை ஏற்படுத்தவும் இது போன்ற விளையாட்டுக்கள் வெகுவாக உதவ முடியும். ஆண்டுதோறும் ஒரு நல்ல காரியத்துக்குப் பயன்படுத்தக்கூடிய முறையில் நுழைவுச்சீட்டு வைத்து நிதிதிரட்டுவதற்கும் இந்த விளையாட்டுக்களை ஒழுங்குசெய்யலாம். இவ்வித ஏற்பாடு இரட்டிப்புப் பயன் தருவதாக அமையும்.

## ஆசிரிய இடமாற்றம்

பருத்தித்துறை, வியாழன்

பிரதேச வாரியான ஆசிரியர் இடமாற்றங்கள் அடுத்தாண்டு ஆரம்பத்தில் நடைபெறுதெனினும் அநேகமாக உள்ளூர் இடமாற்றங்கள் நடைபெற விருப்பதாகத் தெரிகிறது. இம்மாற்றங்கள் ஆசிரியர் பற்ருக்குறை, பாடசாலைகளின் தேவைகள், மாணவர் தொகை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது. அநேகமாக அடுத்த மாதம் 10-ம் திகதிக்குள் மாற்ற உத்தரவுகள் அனுப்பப்படலாமெனவும் தெரிகிறது.

## இப்பகுதியில் குடும்பத்திட்டம்

அல்லைப்பிட்டி, வியாழன்

ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள எட்டு கிளினிக்குகளில் குடும்பத்திட்ட சிகிச்சை ஆலோசனை சம்பந்தமான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் 1968ம் ஆண்டைவிட 1969ம் ஆண்டில் இப் பகுதியில் குடும்பத்திட்டத்தைக் கடைப்பிடிப்போரது தொகை அதிகரித்துள்ளதாகவும் இலங்கை குடும்பத்திட்ட தகவல் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

உண்மை நிகழ்ச்சி இவ்வாறுகப் பூரியர் டகலும் புன்மொழிகளைக் கேட்டு ஆராயாமல் அவர் தம் ஆதாரம் அற்ற கூற்றை ஏற்று பரப்பியதற்கு மனம் வருந்துகிறேன். அருட்பா மருட்பா விவாத வழக்கு நிகழ்ச்சிகள் மக்களால் மறக்கப்பட்டு மறைந்து வரும் காலத்தில் அவற்றிற்கு புத்துயர் கொடுத்து மறுபடியும் சிளம்பச் செய்து நாவலரைக் குறைவு படுத்தி வள்ளலாருக்குப் பெருமை தேடும் மனப்பான்மைக்கு வருந்துகின்றேன். நிகழாதது ஒன்றை நிகழ்ந்ததாக முதலமைச்சர் கூறியதை மறுப்பான் வேண்டி மேற்கண்டவற்றை நான் குறிப்பிட்டு எழுதவேண்டி நேர்ந்ததற்கும் வருந்துகிறேன். முதலமைச்சர் அவர்களுக்கு உண்மை வரலாற்றைத் தெரிவிக்கவேண்டியதை எனக்குரிய மேலான கடமையாகக் கொண்டு அவர்களுக்குக் கடிதம் ஒன்று வரைந்து மறுமொழி காத்திருந்தேன். அவர் தம் மறுமொழி இதுகாறும் வரவில்லை. நானும் எதிர்பார்த்தவண்ணம் இருக்கிறேன்.

நாளடைவில் மக்கள் நினைவிலிருந்து நீங்கிய விவாதத்தைப் பற்றி விவரித்தால் மாண்ட போர் மீண்டும் தலையெடுக்கக்கூடும் என்றஞ்சியே நான் அப்போது அதிகம் எழுதாமல் விட்டுவிட்டேன். தொடர்ந்து செய்யக் கருதியவற்றையும் கைவிட்டேன். இப்போது இடம், பொருள், ஏவல் கருதி உண்மை வரலாற்றைத்தக்க ஆதாரத்துடன் எடுத்து விளக்கும் பொறுப்பு ஏற்பட்டுள்ளது.

### அருட்பா மருட்பா விளக்கம்

காலஞ்சென்ற பெருமகனார் திரு. வி. க. அவர்கள் தமது குருவாம் பரசமய கோளரி சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் வரலாற்றைப் படிக்குந்தோறும் பரவசமாகும் முறையில் எழுதியுள்ளார். அவ்வரலாறு 1908-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. அதன் இரண்டாம் பதிப்பு 1968-ம் ஆண்டில் சென்னை இராயப்பேட்டை மொபரீசுச்சாலை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையாரின் வயிரவிழா மலரில் இடம் பெற்றுள்ளது அவ்வருமையான சரித நூலில் அருட்பா-மருட்பா வழக்குப்

மறுப்பில் 27 இருபத்தேழு விடயங்கள பொய்யாக வரையப்பட்டுளளன என்று 1904 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சென்னை டவுன் தம். வழக்குப் பற்றி விசாரிக்குங்கால் வள்ளலாரைக் குறைவுபடுத்தும் முறையில் கேள்விப்பட்ட செய்திகள் பல. ஆனுல் அவற்றை எல் ... தாம் எழுதி வெளியிட்டுள்ள 'வள்ளலாளர் கண்ட ஒருமைப்பாடு' என்னும் தலைப்புள்ள அரியதோர் நாலில் கூறியுள்ளார்

# யாழ். விளையாட்டரங்கில் சென்னையும் மைசூரும்

# சென்னைக்கோஷ்டி நாளை வருகிறது

யாழ்ப்பாணம், வெள்ளி

நாளை சனிக்கிழமை டிசம்பர் 2-ந் திகதி செவ்வாயன்றும், மாலை 4-00 மணிக்கு யாழ் விளையாட்டரங்கில் சென்னை, மைசூர் சாம்பியன் கோஷ்டிகளுக்கும், யாழ். மாவட்ட உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் இடையே நடைறெவிருக்கும் மாபெரும் உதைபந்தாட்ட மோதல் உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு அரியதொரு வாய்ப்பாகும். ஒலிம்பிக் சுற்றுப்போட்டிகளில் கலந்துகொள்வதற்கென இலங்கை வரும் இக்கோஷ்டிகள் கொழும்பு செல்லும் வழியில் யாழ்ப்பாண உதைபந்தாட்ட ரசிகர்களை மகிழ்விப்பதற்கான ஒழுங்குகளை இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் யாழ். உதைபந்தாட்டச் சங்கம் மேற்கொண்டுள்ளது. சம்பந்தப்பட்ட இரு கோஷ்டிகளில் ஒன்ருன சென்னை உதைபந்தாட்டக் கோஷ்டி. நாளை யாழ் விளையாட்டரங்கில் நடைபெறும் போட்டியில் பங்குபற்றும் பொருட்டு இன்று மாலை 5-00 மணிக்கு விமானமூலம் பலாலி விமானநிலையத்தை வந்தடையும் போட்டியில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் வரும் சென்னைக் கோஷ்டியை யாழ். உதைபந்தாட்டச் சங்க முக்கியஸ்தர்கள் பலாலி விமான நிலையத்தில் வரவேற்பர், மைலிட்டிக் கிராமசபைத் தலைவர் திரு, எஸ் கிருஷ்ணசாமி முதலில் மாலைசூட்டி வரவேற்பார், சென்னைக் கோஷ்டி "ல் அகில இந்திய உதைபந்தாட்ட வீரர்களான ஜோதிவேலு, தங்கராஜா ஆகியோருடன் தமிழ் நாட்டு வீரர் பலரும் இடம்பெறுகிருர்கள் என்பது குறிப்பிடத்தக்கது, சமீபத்தில் சென்னை உதைபந்தாட்டச் சங்கம் நடத்திய சுற்றுப் போட்டிகளில் வாகைசூடி வெற்றி விருதை தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டிருக்கும் சென்னை ரயில்வே கோஷ்டியினரே யாழ்ப்பாணம் வரும் சென்னைக் கோஷ்டியாகும்

யாழ்ப்பாண வீரர்களது ஆட்டத் திறமைக்கும் சென்னைக் கோஷ்டியின் ஆட்டம் நல்ல பலப்பரீட்சையாக அமையுமென்று உதைபந்தாட்ட அபிமானிகள் மத்தியில் பரவலாகப் பேசிக்கொள்ளப்படுகிறது, பலாலி விமான நிலைய வரவேற்பை அடுத்து சென்னை வீரர் மோட்டார் பவனியாக யாழ்.நகர் அழைத்துச்செல்லப்படுவர், அன்று இரவு அவர்களுக்கு அங்கு இராப்போசன விருந்தளிக்கப்படும் யாழ் நகர் முக்கியஸ்தர் பலரும் இவ்வைபவத்தில் கலந்துகொள்வர்,

சென்னைக் கோஷ்டியை அடுத்து டிசம்பர் 2-ம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கும் மைசூர்கோஷ்டி அதே தினத்தில் யாழ்ப்பாணக் கோஷ்டியுடன் மோதும் மைசூர் மாகாண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் வாகைசூடி வெற்றி விருதுபெற்றிருசகும்விமான ஊழியரைக்கொண்ட இக் கோஷ்டியிலும் அகிலபாரத உதைபந்தாட்ட வீரர் சிலரும் மைசூர் மாகாண அரசின் வீரர் பலரும் இடம் பெறுகிருர்கள் மைசூர் கோஷ்டிககும்மகத்தான வரவேற்புஅளிக்கப்படும யாழ்ப்பாண உதைபந்தாட்ட ரசிகர்களது அன்பும் நல்லாசியும்அவர்களுக்குக் கிடைககுமென்பதும் உறுதி

—தே நி

(8-ம் கலத் தொடர்ச்சி)

வரவேற்பிற்குத் தலைமை வகித்த உடுப்பிட்டி எம். பி. திரு மு சிவசிதம்பரம் பேசுகையில் "அமைச்சர் திரு சில்வா பட்டினத்தில் வாழும் மக்கள் மட்டுமல்ல கிராம மக்களும் மின்சாரம்பெறும் திட்டத்தை வெற்றிகரமாக அமுல்நடத்தி வருகின்ருர். மின்சார விநியோகம்பெறும் 500 கிராமங்களில் துன்னுலையும் ஒன்ருகும் இத்திட்டத்தை விரைவில் அமுலாக்குவதில் ஒத்துழைத்த மின்சாரஇலாகா ஊழியர்களுக்கு எனது நன்றிகள். விவசாயம், கைத்தொழிலில் ஈடுபடுவோருக்கு அரசாங்கம் சகலவசதிகளும்செய்துகொடுக்கவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

வரணி மகாவித்தியாலய அதிபர் திரு தங்கராசா வரவேற்புரைநிகழ்த்தினுர்.

## இன்று நாவலர் விழா

கோப்பாய் வெள்ளி

கோப்பாய் நாவலர் பாடசாலை மண்டபத்தில் இன்று மாலை நாவலர் விழா விரிவான முறையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பாடசாலை தலைமையாசிரியர் திரு எம் வல்லிபுரம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு சி கதிரவேலுப்பிள்ளை வலி கிழக்கு காரியாதிகாரி திரு வி கந்தப்பிள்ளை, பண்டிதர் திரு த சுப்பிரமணியம், கோப்பாய் கி ச தலைவர் திரு பரமானந்தராசா உட்பட பலர் சொற்பொழிவாற்றுவர்.

இவ்விழாவை பாடசாலைப் பழையமாணவர் சங்கம், பெற்ருேர் ஆசிரிய சங்கம் ஆகியன ஒருசேர நடாத்துகின்றன

மகாத்மா காந்தி எழுதியும், பேசியுமுள்ளவற்றை இந்திய அரசாங்கம் பல புத்தகங்களாக வெளியிட்டு வருகிறது. 1924ம் வருடத்திலே அவர் எழுதியுள்ள ஒரு பதில் கடிதத்தை நேற்றுப் படித்தேன். அரசியல் மட்டுமல்ல; தேக சுகாதாரம் பற்றியும் அவர் எவ்வ

வினை காட்டியும் கூர்வித்த நோய், ஊர்வித்தவாயுற்ற நோவினை தீர்ப்பான் உகந்தருளி, ஆர்வித்தவாநடியேனை ஐயாறனடிமைக்களே, சேர்வித்தவாதொண்டனேனைத்தன் பொன்னடிக்கீழெனையே.

—அப்பர் அடிகள்

## 'மின்சார விநியோகத்தால் விவசாயிகள் பயனடைவர்'

— சி. பி. டி. சில்வா

உடுப்பிட்டி, வியா.

மின்சாரத்தினுல் நீரிறைக்கும் இயந்திரம் சுமார் 1700 ரூபா விலையானதால் சாதாரண விவசாயிகள் வாங்கிப் பாவிக்க முடியாது. ஆதலால் மின்சார நீரிறைக்கும் இயந்திரங்களை மின்சார இலாகா இறக்குமதி செய்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடனுக்கு விநியோகிக்க வேண்டும் என்று உடுப்பிட்டி எம். பியும், உபசபாநாயகருமான திரு. மு சிவசிதம்பரம் இங்கு விஜயம் செய்த. காணி நீர்ப்பாசன மின்சார அமைச்சருக்கு விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அமைச்சர் திரு. சீ. பீ. டீ. சில்வா மிகவும் குறைந்த விலையில் மின்சார நீரிறைக்கும் இயந்திரங்களை விவசாயிகளுக்கு விநியோகிக்கத் தேசிய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார்.

உடுப்பிட்டித் தொகுதிக்கு முதல் தடவையாக விஜயம் செய்த காணி நீர்ப்பாசன மின்சார அமைச்சர் திரு. சீ. பீ. டீ. சில்வா துன்னலைப் பகுதி மக்களுக்கான மின்சார விநியோகத்தை மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி வளவினுள் நிறுவப்பட்டுள்ள மின்சார உப நிலையத்தைத் திறந்து ஆரம்பித்து வைத்தார்.

துன்னலை முருகையன் கோவில் முன்றலில் தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் அமைச்சர் திரு சீ பீ டீ சில்வா குறிப்பிட்டதாவது:

"இன்று இத் தொகுதிக்கு விஜயம் செய்து மின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைக்கும் வாய்ப்புக் கிடைத்ததையிட்டு நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். மஸ்கெலியா மின்சார உற்பத்தியின் இரண்டாவது திட்டத்திற்கு சர்வதேச உலக நாடுகளிலிருந்தும் 'கேள்விப்பத்திரங்கள்' (ரெண்டர்கள்) கோரியுள்ளோம். இத் திட்டம் 1500 லட்சம் ரூபா பெறுமதி உடையது.

தேசிய அரசாங்கம் சில ஆண்டுகட்கு முன்னர் ஆரம்பித்த உப உணவு அபிவிருத்தித் திட்டத்திற்கு வட பகுதி மக்கள் ஏகோபித்த ஆதரவு தந்துள்ளனர். இவர்களுக்கு கமத் தொழிலைச் சிறந்த முறையில் செய்ய உதவிகள் கொடுப்போம். வட பகுதி மக்கள் முயற்சியுள்ளவர்கள். இலங்கை மக்களின் ஒருமித்த ஆதரவு மூலமே தேசிய அபிவிருத்திக்கு உதவலாம். காணி, அபிவிருத்தி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் என்ற முறையில் காணிகளை அபிவிருத்தி செய்வது, நீர்வழங்கி விவசாயத்துக்கு உதவுவது, கைத்தொழில் விவசாயத்திற்குத் தேவைப்படும் மின்சாரத்தை வழங்குவது இம் மூன்றும் எனது கடமைகளாக இருக்கின்றன.

இக் கிராமத்தில் மட்பாண்டத் தொழில் முன்னேற்றமடைந்துள்ளதென உங்கள் எம். பி. திரு. சிவசிதம்பரம் என்னிடம் சொன்னுர். இக் கைத்தொழிலை முன்னேற்றுவதில் நான் அதிக அக்கறை காட்டுவேன். சூளை வைத்துக் கஷ்டப்படுவதைவிட மின்சார சூளையைப் பாவிப்பதன் மூலம் தரக்கூடிய அழகான பொருட்களைக் குறைந்த உற்பத்திச் செலவுடன் தயாரிக்கமுடியும் என்ற ஆலோசனை கூறுகின்றேன். குடிசைக் கைத்தொழிலுக்கு அரசாங்கம் கடனுதவி வழங்கும் குறைந்த செலவில் மின்சார விநியோகமும் கொடுக்கப்படும்.

பிறநாடுகளின் ஆழமான குழாய்க்கிணறுகள் மூலம் நீர்த்தட்டுப்பாட்டை போக்கியுள்ளனர். மன்னுர்மாவட்டத்தில் ஆழமான கிணறு தோண்டி 500 அடி ஆழத்தில் நீர்வந்தது. யாழ்ப்பாணத்திலும் நண்ணீர்பெற 300 அடியிலிருந்து 500 அடி வரை ஆழமான பாதாளக் கிணறுகளைத்தோண்டிப் பரிசோதனைசெய்யுமாறு உத்தரவிட்டுள்ளேன்.

(5-ம் கலம் பார்க்க)

இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org